தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஐப்பசி 6 (22-10-'60). சனிக்கிழமை | இதழ் 19

தமிழ் முன்னேறாததற்கு இந்தித் திணிப்பே காரணம்.

ஓரவஞ்சனை காட்டாதீர்!

மற்ற மொழிகளை ஒதுக்கிவிட்டு, இந்தி வளர்ச்சிக்குப் பெருந்தொகை செலவிடுகிறீர்களே

இது தகுமா?

தில்லி அரசினரைக் கருமுத்து தியாகராசனார் இடித்துக் கேட்கிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிறுவியவர் நினைவு நாளன்று உரை நிகழ்த்திய திரு. கருமுத்து தியாகராசனார் அவர்கள், மத்திய அரசின் ஆட்சிமொழிக் கொள்கையின் போக்கைக் கண்டித்து இவ்வாறு பேசினார்.

"நூற்றுக்கு முப்பத்தாறு பேர் பேசும் இந்தியை அரசாங்க மொழியாகத் திணிக்க முயல்வது விந்தையிலும், விந்தையாக இருக்கிறது. இந்த முயற்சி தற்கொலைக்கு ஒப்பானது என்பதற்கு நாடெங்கும் எழுந்துள்ள மொழிக் கிளர்ச்சிகளே சான்றாகும்.

சின்னஞ்சிறிய நாடாகிய சுவிட்சர்லாந்தில் 4 ஆட்சிமொழி களிருக்கின்றன. கனடா, பெல்சியம், தென்ஆப்பிரிக்கா, ருசியா போன்ற நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. நாற்பது இலட்சம் மக்களைக் கொண்ட சுவிட்சர்லாந்தில் நான்கு மொழிகள் ஆட்சிமொழிகளாக ஆகலாம் என்றால், நாற்பதுகோடி மக்களைக் கொண்ட நம்நாட்டில், 14 மொழிகளை ஏற்றுக்கொள்வது கடினமா? இந்தி வளர்ச்சியடையாத மொழி; ஆட்சிமொழி ஆவதற்குத் தகுதி யற்ற மொழி. அரசியல் நிர்ணய சபையில் ஒரு வாக்கு வித்தியாசத்தால் ஏற்கப்பட்ட மொழி.

மாகாணங்களுக்கு இடையே தொடர்பு வைத்துக்கொள்வதற்கு ஆங்கிலமே ஏற்றது. இந்தப் பொறுப்பை ஏற்க இந்திக்குத் தகுதி கிடையாது. ஆங்கிலம் நாட்டை ஒன்றுபடுத்தியது. இந்தியோ, அந்த ஒற்றுமையைச் சிதைத்து வருகிறது.

இந்தியாவின் பல்வேறு மொழிகளிலும், தொன்மையிலும், இலக்கியச் செல்வத்திலும் ஒப்புயர்வற்றது தமிழ்மொழி. அரசு நடத்துவோருக்கு அறிவுரை கூறும் நூல் திருக்குறளைப்போல் எங்கும் இல்லை.

பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, ஐம்பெரும் காப்பியங்கள் இலக்கியத்தின் சிகரங்கள்.

இத்தகைய சீரும், சிறப்பும் பெற்ற மொழி, நாடு, விடுதலை யடைந்தபின் கல்வித்துறையிலும், அரசுத் துறையிலும் முதன் மொழியாக வரும் என எதிர்பார்த்திருந்தோம். ஆனால் விடுதலை பெற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும், நம்முடைய தாய்மொழி அதற்குரிய இடத்தைப் பெற்றபாடில்லை. இதற்குக் காரணம் இந்திமொழியின் போட்டியே.

செய்திப்பாட்டு

பழுக்கலிலை போலாடை யணிந்து வந்த
பண்புடைய தோழனைநான் கேட்டேன், "அன்பா!
அழுக்குடுத்தி வந்துள்ளாய் ஏன்? வெளுப்பார்
அகப்படவோ இல்லை?" என்றே. அவன்க ழுத்துச்
சுளுக்கும்வரை சிரித்துவிட்டுச் சொல்லு கின்றான்
"தோழனேநீ இவ்வுலகில் இல்லை யோ? நெய்
முழுக்காடிக் கோடியுடை யுடுத்தி வந்தேன்
முதல்தீபா வளியிதுவே அறிக" வென்றே,

எண்ணெய்முழுக் காடுவர்க்கு நரகமென்னும்
இன்னலுல கதுகிடையா தென்று மக்கள்
கண்ணைமறைத் தோதிடுவார் மதம் வளர்க்கும்
காவியுடைப் பாதகர்கள்; அதையே எண்ணித்
திண்ணையிலே கிடப்பவனும் தெருவோ ரத்தே
தேய்பவனும் ஏங்கிடுவார் தேய்ப்ப தற்கே
எண்ணெய்பெறக் காசில்லை நரக வாழ்வை
ஏற்பதல்லால் வேறுவழி இல்லை என்றே.

நொடிக்கு நொடி கணவர்களை மாற்றுகின்ற
நோய்பிடித்த அழகியரும்; இரவிற் கொள்ளை
யடிக்கவரும் திருடர்களும்; கைக்கூ லிக்கே
அலைகின்ற எத்தர்களும்; அவரை நம்பி
அடுக்கடுக்காய்ப் பகற்கொள்ளை யடித்துச் செல்வம்
அடைவோரும்; அச்சடித்துப் பச்சை நோட்டை
விடுக்கின்ற கள்ளர்களும் நரகஞ் சேரா
திருப்பதற்கே எண்ணெய்முழுக் காடி னாரே!

இழுக்குடைய புராணத்துக் கதையைக் கேட்டும்,
ஏற்றமிலா வழக்கங்கள் கொண்டும், சற்றும்
ஒழுக்கமிலா வாழ்க்கையினை நடத்தி வந்தும்
உயர்நாட்டார் மடமையெனும் சேற்றி றங்கி
முழுக்கெடுப்பார்; கொண்டாட்டம் என்று சொல்லி
முழங்கிடுவார்; பகுத்தறிவில் வெடிவைப் பார், நெஞ்
சழுக்குதனை நீக்காதார் உடையும் ஐயோ!
அழுக்காக உடுத்துகின்றார்! என்சொல் வேனே!

—நாகநாதன்.

அண்ணன் தம்பி என்றால் அவர்களைப்போல் இருக்கவேண்டும் என்று ஊரில் பேசிக்கொள்வார்கள். அவ்வளவு ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள் இராமனுதனும் அழகப்பனும். பார்ப்பதற்குக்கூட இருவரும் ஒரே மாதிரிதான் இருப்பார்கள். அழகப்பனுக்கு ஒரு நோய்நொடி என்றால் இராமனுதன் சாப்பிடாமல் இரவு பகலாக மணிக்கணக்குப்படி விழித்திருந்து மருந்து கொடுப்பான். ஆனால் சாப்பாட்டுப் பிரியனான அழகப்பன் இராமனுதனுக்கு ஒரு நோய்நொடி என்றால், தான் முழுக்க சாப்பிட்டுவிட்டு அவனுக்கு எள்ளளவும் பிசகாமல் எல்லாவற்றையும் கவனிப்பான். அவ்வளவே வித்தியாசம்

அப்படிப்பட்டவர்கள் தங்களது இளமைப்பருவத்தில் ஒரு சோதனைக்கு ஆளானார்கள். அவர்களுக்குத் தாயும் தந்தையுமாக இருந்துவந்த அவர்களுடைய பெரியப்பா திடீரென இறந்துவிட்டார். பலவிதத்தில் பெரும் சொத்து இவர்களுக்கு இருந்தது. முன் யோசனைக்காரனான தம்பி அழகப்பன், பின்னால் கலியாணம் செய்துகொண்டபின் நிலைமைகள் எப்படி மாறுமோ என்று நினைத்து தாங்கள் ஒற்றுமையாக இருக்கும்போதே சொத்தை பாகம் பிரித்துக் கொள்ளலாம் என்று அண்ணனிடம் யோசனை சொன்னான். உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளடா என்று அண்ணன் சொல்லிவிட்டான். பிறகு இருவருமே உட்கார்ந்து பாகம் பிரித்தனர். பங்காளிகள் யாரையும் அவர்கள் மத்தியஸ்திற்குக் கூப்பிடவில்லை. ஆனால் அவர்கள் எது பின்னாலே நேரக்கூடாது என்று நினைத்தார்களோ அது முன்னாலேயே வந்துவிட்டது.

வீடு இரண்டு இருந்தது. ஆளுக்கொன்றாய் எடுத்துக்கொண்டார்கள். மற்றபடி ரொக்கத்தையும் கணக்கு வழக்குகளையும், வட்டிக்கடையையும் அதைக் கவனித்து வந்த இராமனுதன் எடுத்துக்கொண்டான். மாடு, ஆடு, கோழி, நிலபுலன்களை தம்பி ஒப்புக்கொண்டான். நகைகளையும் பிரித்துக்கொண்டார்கள். பரம்பரை பரம்பரையாக, பழுப்பேறிய ஒரு கல் மோதிரத்தை, அண்ணன் தன் விரலில் அணிந்திருந்தான். தம்பிக்கு ஏனோ அதன்மேல் ஆசை. அதை அண்ணனிடம் கேட்டான். அண்ணனும் கொடுத்துவிட்டான். ஆனால் மறுநாளே திரும்பிவந்து "தம்பி! இத்தனை நாளா அது என் கையிலிருந்தது இப்போது இல்லாதபோது என்னவோபோல இருக்கிறது. அதை எனக்குத் தாயேன்" என்று கேட்டான். ஆனால் அழகப்பன் தர மறுத்துவிட்டான். நேற்றே நீ எனக்குத்தான் அது வேண்டும் என்று சொல்லி இருந்தால் நான் மறுத்திருக்கமாட்டேன். உன் மனத்தை யாரோ கெடுத்துவிட்டார்கள். என்னிடம்கூடத்தான் இன்று சிலர் வந்து சொன்னார்கள் 'நீ ஏமாளி. ரொக்கத்தைப் பூரா அவனிடம் கொடுத்துவிட்டு இந்தக் காஞ்ச பூமியைப் பெற்றுக்கொண்டிருக்கிறாய். விடிய விடியப் பாடுபட்டாலும் வருஷத்திற்கு நூறு பொதிக்குமேல் இராதே" என்று. அதற்காக நான் உன்னிடம் வந்து ரொக்கத்தில் பாதியைக் கொடுத்துவிடு என்று கேட்டேனா?" என்றான். இராமனுதனுக்கு ஒரே திகைப்பாகப் போய்விட்டது. ஒன்றும் புரியவில்லை "டேய்! என்னடா இது? உளறல். நீ சுத்த இவனாக இருக்கிறாயே. இப்பொழுதே வேண்டுமானாலும் ரொக்கத்தை அப்படியே ஒப்புக்கொள். ஆனால் அந்த மோதிரத்தை மட்டும் மறக்காதே. அது அப்பா சாகும்தருவாயில் அன்புடன் என் கையில் அணிவித்தது. உனக்குத் தெரியாதா? என் மனசு அது இல்லாமல் நிம்மதி அடையாது போலிருக்கிறது. நேற்றிரவு முழுவதும் தூக்கமே இல்லை" என்று இராமனுதன் பரிதாபமாக அழகப்பனிடம் கெஞ்சினான். அதற்குப் பதிலாகப் பூச்சரம் ஒன்று தருவதாகவும் வாக்களித்தான். ஆனால் அழகப்பன் மறுத்துவிட்டான். இராமனுதன் வருத்தத்துடன் வீடு திரும்பினான்.

கண்ணாடிக் கூண்டுக்குள் அழகாகப் பிரகாசித்த ஒளி கண்ணாடியை எடுத்துவிட்டபின் காற்றில் அங்குமிங்கும் நடுங்கி அடங்கிவிடுவதில்லையா? சகோதரர்களிடையே ஒருவர்க்கொருவர் இருந்த அன்பு நம்பிக்கை என்ற கண்ணாடி உடைந்து நொறுங்கியபின் சந்தர்ப்பவாதிகளின் பேச்சாகிய காற்றால், ஒற்றுமை என்கிற சுடர் நடுங்கத் தொடங்கிவிட்டது. எப்போது அணையப் போகிறதோ என்று அவர்களிடம் அன்பு கொண்ட ஒரு சிலர் நினைத்தார்கள். ஆனால் அவர்களால் சகோதரர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்த முடியவில்லை.

கொஞ்சம் நஞ்சமிருந்த அன்பும் பாசமும்கூட, அவர்களுடைய கல்யாணச் சச்சரவால் படக்கென்று அணைந்து போய்விட்டது. அதுமட்டுமல்லாமல் அவர்களை ஒருவருக்கொருவர் பிறவிப் பகைவர்களைப் போல் ஆக்கிவிட்டது. கண்டனூர் சுப்பையா அவர்களின் மகளைப்போ அழகப்பன் பெண் பார்த்துவிட்டு வந்தான். இன்னும் கொஞ்ச நாட்களில் நல்ல நாள் பார்த்து பேசி முடித்துக்கொள்ளலாம் என்று சுப்பையா சொன்னார். பெண்ணை அழகப்பனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அவர்களிடமிருந்து இரண்டு மூன்று மாதம் வரைக்கும் எவ்விதத் தகவலும் வரவில்லை. மறுபடி தானே போவது தனது கௌரவத்திற்கு அவமதிப்பு என எண்ணி அழகப்பன் மீண்டும் அதற்காக முயற்சிகள் எடுத்துக்கொள்ளவில்லை. சில நாட்களில் அதைப்பற்றி மறந்தும்விட்டான். மேலும் அவனுக்குப் பெரிய இடங்களிலிருந்தெல்லாம் திருமணப் பேச்சு வந்தது. ஆனால் அவன் மனத்திற்குப் பிடித்தமாதிரி எந்தப் பெண்ணும் அமையவில்லை. அதனால் அவன் தன் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தான். இந்தச் சமயத்தில்தான் அண்ணன் இராமனுதன் அவனைக்காணவந்தான் தான் திருமணம் செய்துகொள்ளப் போவதாகவும் இந்தச் சமயத்திலாவது பிளவுபட்ட நாம் ஒன்றுபட வேண்டுமென்றும் தம்பியிடம் இராமனுதன் வேண்டி நின்றான். முதலில் அதை ஒப்புக்கொண்ட அழகப்பன் அண்ணன் பெண் பெயரையும் ஊரையும் சொல்லியதும் ஆச்சரியமுற்றான். பிறகு உடனே அவன் முகம் கடுமையாக மாறிவிட்டது. ஓஹோ! உன்னுடைய வெற்றிப் பிரதாபத்தை முரசறைந்து சொல்ல வந்திருக்கிறாயோ என்று கோபமாகச் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டான். இராமனுன் வழக்கம்போல திகைப்புடன் ஒன்றும் புரியாமல், ஆனால் கோபத்துடன் திரும்பிப் போய்விட்டான். தம்பியின் அர்த்தமற்ற கோபமும் முறைப்பும் அவனுக்கு எரிச்சலையும், வெறுப்பையும் உண்டுபண்ணின.

தான் பார்த்த பெண்ணை, அண்ணன் பேசி முடித்துக்கொண்டது திட்டமிட்டுச் செய்த சதியென்றே தம்பி நினைத்தான். அதை மெய்ப்பிக்கும் விதத்தில் பலர் அவனுக்கு சேதி சொன்னார்கள். அண்ணனுடைய திருமணத் தேதியன்றே தன்னுடைய திருமணமும் நடைபெற வேண்டும். அவனுடைய திருமணத்தை விட ஆயிரம் பங்கு பிரமாதமாக தன்னுடைய திருமணம் இருக்க வேண்டும் என்று அழகப்பன் முடிவு செய்தான். ஆனால் அவனுடைய அவசரத்திற்குத் தகுந்தாற்போல் ஒரு பெண்ணும் வாய்க்கவில்லை. தன் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றிவிடுவதென்ற முடிவிலிருந்த அழகப்பன் அதற்காகக் கொஞ்சமும் யோசிக்கவில்லை. கொஞ்சம் சுமாரான இடத்திலிருந்து அழகான பெண்ணொன்றைப் பேசி முடித்துக்கொண்டான்.

ஊரே கண்டு வியந்தது. ஊரிலுள்ள அனைவரும் அழகப்பன் வீட்டில்தான் குழுமியிருந்தனர். அழகப்பனுடைய ஏற்பாடுகளையறிந்த இராமனுதன் மனம் வருந்தியது. தன் கல்யாணத்தைச் சுருக்கமாக முடித்துக் கொண்டான். எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் எனத் திரிபவர்கள் அழகப்பனுடைய கல்யாணத்தைச் சாக்கிட்டு கிடைத்த வரை சுருட்டிக் கொண்டார்கள். அழகப்பனுடைய கண்களை மறைத்திருந்த பொறாமைத் திரை இவைகளை மறைத்துவிட்டது. நாட்கள்பல சென்று ஆண்டுகள் சில மறைந்தன. ஆனால் அண்ணன் தம்பிகளுடைய பிளவு மட்டும் தீரவில்லை.

ஊரில் இராமநாதனுடைய நிலைமையும் செல்வாக்கும் உயர்ந்து கொண்டே வந்தது. அவனுடைய செல்வாக்கு உயர உயர அழகப்பனுக்கு அவன்மேல் பொறாமையும் ஆத்திரமும் அதிகமாகியது. நமக்குப் பிடிக்காதவர்கள் முன்னுக்கு வருகிறார்கள் என்றால் நமக்கு எவ்வளவு ஆத்திரம் வருகிறது.

ஆனால், இராமனுதன் அப்படி இருக்கவில்லை. தம்பிக்காக அவன் மனம் கசிந்துருகியது. "இந்த வருடம் மழையில்லை. அழகப்பனுடைய நிலபுலன்கள் தூங்கிவிட்டன. அவனுடைய ஜோடி மாடுகள் நோயால் மாண்டுவிட்டன. பெரும்புயலால் வீட்டின் பின்பகுதி சரிந்துவிட்டது." என்று ஒவ்வொரு தடவையும் ஏதாவது துர்ச்செய்திகளாகவே அழகப்பனைப் பற்றி வரும். அப்பொழுதெல்லாம் இராமனுதன் துடிப்பான். ஏதாவது உதவிசெய்ய வேண்டுமென்று நினைப்பான். ஆனால் தம்பியின் குணமறிந்து எல்லா உணர்ச்சிகளையும் மனத்திலடக்கிக்கொண்டு வாளாதிருந்தான்.

★

அழுதுகொண்டே வந்த மகள் லட்சுமியைக் கண்டு தாய் துடிதுடித்தாள். ஏனம்மா? ஏன்?...என்ன நடந்தது?...என்று கலவரத்துடன் அவளை அணைத்துக்கொண்டு கேட்டாள். வெளியே சுற்றிவிட்டு அப்போதுதான் வீட்டுக்கு வந்த அழகப்பன் தேர்வு எழுதப்போன மகள் உடனே திரும்பிவிட்டதைக் கண்டு "ஏனம்மா பரீட்சை எழுதவில்லையா? ஏன் கேள்விப் பேப்பர் அச்சாகவில்லையா? என்று கேட்டார்."

லட்சுமி பதில் சொல்லவில்லை, அவன் மனைவி பதில் சொன்னாள் "சம்பளப்பணம் கட்டாதவர்களை எல்லாம் வெளியே போகச் சொல்லி விட்டார்களாம்." பல்லைக் கடித்துக் கொண்டே சொன்னாள் என்றாலும் அவளால் விம்மலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அது அழகப்பனுக்கு ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. "மகள பெரிய எம். ஏப் படித்துக் காப்பாற்றப்போகிறாள். அது கெட்டுவிட்டது, இப்போ. மனுஷன் எவ்வளவு கஷ்டப்படுகிறான். சம்பளம் கட்டலைன்னு இவ்வளவு ரோஷம் வருகிறதே! பொறந்த வீட்லேயிருந்து அள்ளிக்கிட்டு வந்தே பாரு! பொம்பளைக்கு என்ன படிப்பு

(10-ம் பக்கம் பார்க்க)

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 22-10-'60 | இதழ் 19

சாதி வெறி சமய வெறி

சாதிப் பிரிவினைகளையும், சாதியால் ஏற்படும் அநீதிகளையும் அகிம்சா முறையில் எதிர்க்க முடியா விட்டால், பலாக்காரத்தின் மூலமாவது போராடுங்கள். —ஜகஜீவன்ராம்.

சாதிவெறி மதவெறி இரண்டும் இந்த நாட்டைப் பிடித்த நோய்கள். இந்த நோய்கள் தீராத வரையிலே நாடு உருப்படப்போவதில்லை. நல்ல அறிஞர்கள், நாட்டிலே சமரசம் நிலவவேண்டுமென்று பாடுபட்டவர்கள், பொதுப்பணியிலே ஈடுபட்டவர்கள் எல்லோரும் இந்த வெறிகள் ஒழியவேண்டும் என்று கருத்துரை கூறியிருக்கிறார்கள். இதை யொழிப்பதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்ட அறிஞர்களும் பெரியார்களும் நம் நாட்டில் அன்று தொட்டே இருந்துதான் வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாம் மண்ணோடு மண்ணாகிப் போய்விட்டார்கள். அவர்கள் ஒழிக்க வேண்டுமென்று எண்ணிய சாதிவெறியும் மதவெறியும் இன்று தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றன.

சாதிவெறி தீயதென்று அறிஞர்கள் எல்லோரும் கூறுகிறார்கள். இதிலே யாருக்கும கருத்து வேற்றுமை இல்லை.

மதவெறி கொடியதென்று மதத்துறையிலே ஈடுபட்டவர்கள் கூட அறிவுரை வழங்குகிறார்கள்.

ஆனால், இந்தச் சாதியும், மதமும் மட்டும் இன்றும் தத்தம் வெறியாட்டத்தை நிறுத்தாமல் இருப்பதன் காரணம் என்ன ?

மதம், மதியை மயக்கும் அபினி போன்றது என்று கூறினார்கள்.

சாதி, மதியை மாற்றும் பட்டைச் சாராயம் போன்றது என்று கூறலாம்.

இருந்தும் இவற்றை இன்றும் நாடுவோர் இருக்கக் காரணம் என்ன ? சாதியுயர்வும் மதபாசமும் பிடித்தவர்கள் இன்றும் மக்கள் மத்தியிலே நடமாடக் காரணம் என்ன ?

இதன் அடிப்படை என்னவென்று சிந்தித்து உணர்ந்தால்தான் இவற்றின் தீமையை வேரோடு போக்க முடியும்.

ஒரு சிலர் சொல்லுவார்கள், சாதி யபிமானம் இருக்கவேண்டும்—வெறி தான் கூடாது என்று. அதைப்போலவே மதபக்தி இருக்கவேண்டும் மதவெறி கூடாது என்றும் கூறுவார்கள்.

இதைப்போல் தவறான கருத்து வேறு இருக்க முடியாது.

சாதி யபிமானமே, மிகுதிப்படும்போது சாதி வெறியாக மாறுகிறது என்பதை உணரவேண்டும். இதை நன்றாக உணர்ந்தால், தான் சாதி யபிமானமும் கூடாது சாதியும் கூடாது என்ற கருத்துத் தோன்றும்.

மதபக்தியே உணர்ச்சியின் எல்லைகடக்கும்போது மதவெறியாக மாறுகிறது. மதபக்தி யில்லையானால், மதவெறியும் தோன்றாது—இவற்றிற்கு அடிப்படையான மதமே இல்லையானால் தொல்லையே இல்லை. இதை யுணர்ந்தால்தான் மத பக்தியோ அல்லது மதவெறியோ உண்டாக்கக்கூடிய மதமே கூடாது என்ற எண்ணம் தோன்றும்.

மனிதனுக்குச் சாதியபிமானமோ, மதாபிமானமோ இல்லையானால் தான் மனிதாபிமானம் ஏற்படும். மனிதாபிமானம் ஏற்படாமல் செய்வதற்கு இந்த இரண்டும் காரணமாக இருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

இந்த இரண்டையும் ஒழிப்பதற்கு அந்தக் காலத்திலேயே பல ஞானிகள் முயற்சி யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய பலமெல்லாம் போதவில்லை. இப்போது உண்டாயிருக்கிற சமுதாயத்திடம் தான் இந்தத் தீமைகளை ஒழிக்கக்கூடிய உண்மையான பலம் இருக்கிறது.

தன்னலம் படைத்தவர்கள், சாதியின் பெயரால் உயர்வு தேடுபவர்கள், சாதி யபிமானத்தின் மூலமாக சலுகை பெற எண்ணுபவர்கள் இப்படிப்பட்ட தீயவர்களால்தான் சாதி இன்னும் போற்றி வளர்க்கப்பட்டு வருகிறது.

மதத்திலே அளவுகடந்த பக்தியும், தன் மதத்தைச் சாராதவர்கள் தன்னோடு சேர்ந்து வாழவோ, சரி சமமாக வாழவோ தகுதியற்றவர்கள் என்ற நினைப்பும், மத மூலவர்கள் கூறியவற்றைத் தவிர மற்ற கருத்துக்களெல்லாம் ஏற்கக்கூடாதவை என்ற எண்ணமும் தான் மத வெறிக்கு உரமூட்டுவனவாக இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட எண்ணங்கொண்டவர்கள் தாம் மத வெறி பிடித்தவர்களாக மாறுகிறார்கள். இவர்களிடத்திலே அறிவுடைமையையோ, காரண காரியங்களைச் சிந்தித்துப் பார்க்கும் மனிதத் தன்மையையோ காண முடியாது.—எதிர்பார்க்கவும் முடியாது.

சாதி சமய வெறிகளை முறியடிக்க வேண்டுமானால், எதற்கும் துணிந்தவர்களும், இலட்சியவாதிகளுமான இளைஞர்கள் சேர்ந்த ஓர் இயக்கம் அல்லது படை உருவாக வேண்டும். அந்தப் படை கட்டுப்பாடாக இயங்க வேண்டும். சாதி வெறி சமய வெறி எந்தத் திசையிலிருந்து எந்த எந்த உருவில் எந்த வேகத்தில் எதிர்ப்பட்டாலும் அவற்றின் இடுப்பை யொடித்தெறியக்கூடிய உள்ளம் படைத்தவர்களாயிருக்க வேண்டும் அந்தப் படையினர்.

அரசாங்கம் உண்மையில் சீர்திருத்த மனப்பான்மையும், முன்னேற்றக் கொள்கையும் உடையதாயிருந்தால் அந்த இளைஞர் படையின் இலட்சியம் எளிதாக நிறைவேறும். ஆனால், இப்போது இருப்பதுபோல, பிற்போக்குக் கொள்கைகளும், சூழ்ச்சி மனப்பான்மையும் உடைய அரசாங்கத்தால், சாதி சமய வெறி மேலும் தூண்டிவிடப்படுமே தவிரத் தணிக்கப்படமாட்டாது. ஆகவே இந்த இளைஞர் படையினர் அரசாங்கத்தையும் எதிர்த்துப் போராடக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட—சாதி சமய வெறிகளை ஒழிப்பதை மட்டுமே இலட்சியமாகக் கொண்ட—ஓர் இயக்கம் நம்நாட்டில் எழுமானால், எண்ணி இரண்டாண்டுகளில் இந்த வெறிகளை விலக்கி நல்ல நெறிகளை நிலை நிறுத்தமுடியும்.

பழமையும் புதுமையும்

தமிழ் எழுத்தாளர்களிடையே ஒரு விசித்திரமான மனப்பான்மை நெடு நாட்களாக இருந்து வருகிறது. தமிழ் எழுத்தாளர்கள் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் என்று நெடு நாட்களாகத் தங்களைக் குறிப்பிட்டுக்கொண்டு வருகிறார்கள். இந்த மறுமலர்ச்சி எழுத்தாளர்கள், தமிழ்ப் புலவர்களை எழுத்தாளர்களாக மதிப்பதில்லை.

இந்த விஷயத்தில் மறுமலர்ச்சி எழுத்தாளர்களை மட்டும் குறை கூறினால் போதாது. தமிழ்ப் புலவர்களிடையேயும் இப்படிப்பட்ட ஒரு மனப்பான்மையிருந்து வருகிறது அவர்கள், இந்த மறுமலர்ச்சி எழுத்தாளர்களைத் தமிழ் அறிந்தவர்களாக ஒப்புக்கொள்வதில்லை.

இந்த இரு சாராரிடையேயும் இப்படிப்பட்ட முற்றிலும் விரோதமான கருத்துக்கள் ஏற்படக் காரணம் இதுதான்:

தமிழ்ப் புலவர்கள், பழமையொன்றையே போற்றக் கற்றவர்களாக இருக்கிறார்கள். மறுமலர்ச்சி எழுத்தாளர்களோ, புதுமையை மட்டுமே வரவேற்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களிடம் பழமையை மதிக்கும் மனப்பான்மை கிடையாது, அவர்களிடமோ புதுமையை ஏற்கும் உள்ளம் இல்லை.

இரு தரப்பிலும் இப்படிப்பட்ட தவறான போக்குகள் இருந்து வந்திருக்கின்றன. இன்னும் சிலரிடையே இந்தப் போக்குகள் இருந்து வருகின்றன.

ஆனால், இந்த மாதிரியான மனப்பான்மையுள்ள இரு தரப்பினருமே அறிவுலகத்திற்குப் புறம்பானவர்கள் என்பதில் ஐயமில்லை.

தொல்காப்பியத்திலோ நன்னூலிலோ சிறுகதைக்கோ நாவலுக்கோ இலக்கணமில்லை என்பதற்காக அவை இலக்கியமாகா என்று கூறுகின்ற புலவர்-அறிவுடையவராகமாட்டார். சிறுகதைக்கோ நாவலுக்கோ தொல்காப்பியத்தில் இலக்கணம் கூறப்படவில்லை என்பதற்காக, தொல்காப்பியம் குறைபாடுடையதெனக் கூறுகின்ற எழுத்தாளர், தமது அறியாமையை வெளிப்படுத்திக் கொண்டவரேயாவார்.

பழமையைப் போற்றிப் புதுமையை ஏற்கும் பான்மையுள்ளவர்கள் தாம் உலகில் நல்லறிஞர்களாகக் கருதப்படுவார்கள். அவர்களால்தான் நாட்டுக்கு நல்ல இலக்கியங்கள் கிடைக்கும்.

நேற்றுப் புதுமையாய் விளங்கியதுதான் இன்று பழமையாகிவிட்டது என்பதையும் இன்று புதுமையாய் இலங்குவது நாளைப் பழமையாய்ப் போய்விடும் என்பதையும் நினைத்துப் பார்த்தால் இரு சாராரிடையேயும் இருக்கும் தவறான கருத்துக்கள் மறைந்து போய்விடும்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், டாக்டர் மு. வரதராசனார் போன்ற நல்லறிஞர்கள் பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைக்கக்கூடிய முறையில் தமிழ்ப் பணி புரிந்து வருகிறார்கள். பிற பிறரும் இவர்கள் வழியைக் கடைப்பிடிப்பார்களானால், தமிழ் எழுத்தாளர் உலகிலே நெடுநாளாய் நிலவிவரும் இந்தப் பழமை புதுமைப் போராட்ட மனப்பான்மைகள் ஒழிந்து, நல்ல புதுமை இலக்கியங்கள் உருவாக வழி பிறக்கும்.

புலவர்க்குப் புலவராகவும், மறுமலர்ச்சியாளர்க்கு மறுமலர்ச்சியாளராகவும் விளங்கும் அறிஞர் அப்பாத்துரையாரின் தலைமையில் இயங்கும் தமிழ் எழுத்தாளர் சங்கம், பழம்புலவர்க்கும் மறுமலர்ச்சியாளர்க்கும் இடையே உறவுந் தொடர்பும் வளரப் பாடுபடுமென்றும், அந்தப் பாடு நல்ல பயனளிக்கும் என்றும் நம்புகிறோம்.

<u>தலைமை நிலைய அறிக்கை (அ) 4/60</u>

தி. மு. க.

தலைமைச் செயற்குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம், **6-11-60** ஞாயிறு மாலை 3 மணிக்கு மதுரை நகரில், டாக்டர் ஏ. அநுசலம் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்

'அறிவகம்', சென்னை-13.,
15—10—1960

கே. ஏ. மதியழகன்,
தலைமை நிலையச் செயலாளர்.

ஓ. ஹென்றி!

மா. தங்கவேலர்.

தனக்கும், இலக்கிய உலகுக்கும் புகழைத் தேடித்தந்த புதுமை எழுத்தாளன் ஓ ஹென்றி (O. HENRY) சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த அவனது வாழ்க்கை, அவன் உருவாக்கிய கதாபாத்திரங்களை விட சுவை மிகுந்தது. இருளை அழிக்கக் கரத்திலே ஒளி விளக்குத் தாங்கிய அவனது வலிமை, மிகப்பெரிது நாட்டவர் துதி பாடிய அந்த ஏட்டாசிரியனின், 'வாழ்வுக்கதை' இதோ இங்கே தரப்படுகிறது... .. ..

மனிதன் எப்படிப்பட்டவன்? அவனது குணங்களிலேதான் எத்தனை வேறுபாடு! இத்தனை மாற்றத்துக்கும் அவனை ஆளாக்குவது எது?

அதோ போகிருனே பாதசாரி அவனுக்கேன் அவ்வளவு வாட்டம்? மாலை நேரம், பூங்காவினருகேதான் நடை போடுகிருன். ஆனாலும், புன்னகை பிறக்கவில்லையே அவனிடம். பாவம் எப்படிச் சிரிப்பான்! கவலையெல்லாம் மறந்து. காலையிலே சிறை பிடித்த அலுவலகம், இப்போதுதான் அவனை விடுவித்திருக்கிறது. ஆலையிலே சிக்கிய கரும்பைப் போன்றது அவன் வாழ்க்கை. கிளையைப் பிரிந்த இலைபோலத் தவித்தான். அந்த ஆலையிட்ட கரும்புக்கு மாலையிட்டிருந்தாள் ஒரு மாது. அவனை எதிர்பார்த்துத் துடித்துக் காத்திருக்கவில்லை அவள், வாசலிலே. அவன் வாடியமுகத்தோடு வாசலிலே கால் வைத்தபோதுதான், வீதியின் திருப்பத்திலே அவளும் வந்துகொண்டிருந்தாள். கையிலே சின்னக்குடை, பையிலே பெரிய பெரிய புத்தகங்கள்...காட்சி தர தளர் நடை போட்டு வந்தாள். ஆமாம், அவளும் உழைத்துக் களைத்துத்தான் வருகிருள்.

கதவைத் திறந்துகொண்டு, அவனது அறையினுள்ளே போய்ச் சாய்ந்தான். அவன் எதிர்பார்த்த நிம்மதி கிடைத்ததுபோல கண்களை மூடிக்கொண்டான். மூடிய கண்கள் திறந்தபோது, எதிரே காப்பிக் கோப்பையோடு அவள் வந்து நின்ருள். காப்பியைச் சுவைத்துக்கொண்டே, அவளை உற்றுப் பார்த்தான். 'கைப்பிடித்தபோது எத்தனை எழிலோடு காட்சி தந்தாள். சிரிக்கும்போதே சிந்தையெல்லாம் தேன் குடம் சாயுமே! அந்த அழகுப் பதுமையா இந்தத் தேய்ந்த நிலவாகிவிட்டாள்' அவனது சிந்தனையின் முடிவு நெஞ்சத்திலிருந்து நீண்ட பெருமூச்சை வெளியே தள்ளியது.

வாழ்க்கையை நகர்த்த அவனும், அவளும் படும்பாடுதான் எத்தனை எத்தனை! பாய்ந்து வரும் இன்பம் என்று நினைத்தான், இப்போதோ வேதனையின் மடியிலே தலை சாய்த்துவிட்டான். பகலும் இரவும் வந்து போயின. அவன் எதிர்பார்த்த 'வாழ்க்கை' மட்டுமே வரவேயில்லை. இவன்...வாழ்க்கை இப்படி அமைவானேன்? இவனைப்போலவா எல்லாரும் இருந்துவிடுகிருர்கள்! இதோ காரிலே பறந்து வருகிருனே... அவனைப் பார்த்தாயா? அவனருகிலிருக்கும் அவளையல்லவா பார்க்கிருய்! அவளைப் பிறகு பார்ப்போம். முதலில் அவனைப் பார்! 'வாழப் பிறந்தவன்' நான் தானென்று எடுத்துச் சொல்லுகிறதே அவனது பேசும் புன்னகை. ஆடைகளைப் பார்த்தாயா? உல்லாசத்தின் பிறப்பிடமே அங்கு தானிருப்பதைப் போலத் தெரிகிறதல்லவா? சமுதாயத்திலே, சகல வசதிகளும் படைத்த அவனுக்கு 'உயர்ந்த இடம்' அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. அவன் பேசுவது கட்டளை! செய்வதெல்லாம் அற்புதம்...என்று எண்ணிடும் மக்களுக்கிடையே வாழுகிருன். சுற்றிலும் இலட்சோப லட்சம் நட்சத்திரங்களிருந்தாலும் நிலவின் கம்பீரம் குறைந்துவிடுவதில்லையே! அந்த 'உயர்ந்த இடத்தைச் சேர்ந்தவனும் சூழ்ந்திருந்தவர்களைக் கண்டு கவலை கொள்ளாமலே வாழ்ந்து வந்தான். அவனருகில் சிரித்தும் சிரிக்காமலும் சிவந்த மேனியாளொருத்தி அமர்ந்திருக்கிருளே அவளைப்பற்றிக் கூறுவதிலே காலங் கடத்துகிறேனென்று குறைபடுகிருயல்லவா இதோ அவளையும் தான் பார்!

அம்பு விழிகளோடு, காளையரின் உள்ளங்களிலே போராட்டத்தைத் துவக்கி வைக்கின்ற அவளைக் காணுகின்றபோது...யாருக்குத் தான் வாழ்க்கையின் மீது ஆசை பிறக்காமல் போய்விடும். 'போதும் இந்த வாழ்வு' என்று நிலையாமை பேசியவர்கள்கூட இந்தப் பொன் வாத்தைக் கண்ட பிறகு 'வாழ வேண்டும், என்ற முடிவுக்கே வருவர்! அத்தனை அத்தனை 'வாழ்வுக் கதை' கூறியது அவளது அழகு. சிங்காரப் பூந்தோட்டத்தின் அழகு மானை அணைத்து மகிழும் அந்தச் சொந்தக்காரனுக்கு மட்டும் 'சுந்தர வாழ்வு' அமைவானேன்! களைப்போ உழைப்போ அவர்கள் கண்டறியாதது. தப்பித் தவறி வேதனை அவர்களைத் திரும்பிப் பார்த்ததுகூட இல்லை. அவர்கள் அப்படி ஆக்கப்படுவானேன்? அத்தகு சூழ்நிலைக்கு யார் காரணம்? பாதையிலே பார்த்த பாதசாரி வேதனையால் துடிப்பானேன்? அவனோடு அன்பு வாழ்க்கை வாழ வந்தவள் துன்பச் சுமைதாங்கியாவானேன்?... அப்படியானல் 'வாழ்க்கை' சமுதாயத்தில் உயர்ந்தவர்களுக்கு மட்டும்தானா? தாழ்ந்து கிடப்பவர்கள் 'போராட்ட வாழ்க்கை' தானா நடத்த வேண்டும்?... மூட்டை சுமப்பவன்; வண்டியிழுப்பவன்; மனிதனை வாகனத்திலே வைத்து இழுத்துச் செல்லும் மனிதன். குமாஸ்தா; பட்டத்தைப் பெற்றும் வேலைக்குப் பட்டமாய்ப் பறப்பவன், மின்னும் அழகுக்குப் பொன்னாரம் பூட்டி மகிழாமல் மணாளனோடு மண்ணைப் பணியாற்றும் பெண்ணழகிகள்...எல்லாருமே சமுதாயத்தில் தாழ்ந்திருப்பவர்கள்தானே, இவர்களெல்லாம் வாழ்வது எப்போது?

இவர்களெல்லாம் 'வாழ முடியாதவர்'களென்ருல், வாழும்வகை இவர்களுக்கெல்லாம் காட்ட வேண்டாமா? இந்த வழி வகைகளுக்குக் குறுக்கே நிற்கும் சமுதாயத்தையும், பெரிய மனிதர்களையும் முதலிலே திருத்த வேண்டும்.

...இந்தப் புரட்சிகரமான எண்ணங்களை மனத்திலே பதித்துக்கொண்டு, எழுத்துலகிலே குதித்தான் ஓ. ஹென்றி இன்றைக்கு சுமார் அரை நூற்ருண்டுகளுக்கு முன்பு. நியூயார்ககிலே அவன் நிரந்தரமாகத் தங்கி எழுதத் துவங்கியபோது, அவனது கண்களின் முன்னே 'வாடித் துடித்த' மக்கள் வந்து நின்றனர். அவன் நாளெல்லாம் பார்த்துப் பழகிய பரிதாபத்திற்குரியவர்களே அவனது 'பாத்திரப் படைப்புக்கு ஆளாகினர். படித்ததும் மறந்துவிடும் பாத்திரங்களை அவன் கற்பனை செய்து பார்க்கவில்லை. நினைவோடு தொடரும் உயிரோவியங்களையே உருவாக்கினன் ஹென்றி. ஹென்றி பல சந்தர்ப்பங்களிலே தனது வாழ்க்கையின் பகுதிகளையே கதையாக்கினன். அத்தகு சுவையான அம்சமிருந்தது அவனது வாழ்விலே.

ஓ ஹென்றியின் சொந்தப் பெயர் வில்லியம் சிட்னிபோர்ட்டர் William Sidney Porter என்பதாகும். 1862-ம் ஆண்டு வடகரோலின (North Carolina)விலே செப்டம்பர் திங்கள் 11-ம் நாள் ஹென்றி பிறந்தான். அவன் பிறந்து அழுதபோது, அவனது குடும்பமே வாழ்க்கையை நடத்துவதற்காக தினம் தினம் அழுதுகொண்டுதானிருந்தது. சேற்றிலே செந்தாமரை தலைதூக்கியதுபோல, வறுமைச் சேற்றிலே ஹென்றி தத்தித் தவழ்ந்தான். காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சுதானே! கூழுக்காகப் பெற்றோர்கள் அழுதபோது பாலுக்காக அழுதான் பாலகன்! அந்த அழுகையைக் கண்டுகூட பெற்றோர்களால் மகிழ முடிந்தது. சிரிக்கவைக்க மார்க்கம் தெரியவில்லையே. அழுவதைக் கண்டாவது ஆனந்தப்படலாமேயென்று நினைத்துவிட்டார்கள்போலும்! அந்த ஆனந்தம் நிலைக்கவில்லை; ஹென்றியின் தாயை மரணவாசலுக்கு இழுத்துச் சென்றது ஹென்றிக்கு மூன்று வயதானபோது, கொடுமையைக் காணமுடியாத அவனது தாயின் கண்கள் மூடிக்கொண்டன.

தாயின் மறைவுக்குப் பிறகு, குறைந்த வருவாயுள்ள வைத்தியத் தொழிலை நடத்திவந்த ஹென்றியின் தந்தையால் மகனைச்சரியாக கவனத்தோடு வளர்க்கமுடியவில்லை. அன்னையின் அருமை பெருமை தெரிந்து, தந்தையின் ஆதரவோடு வளர்க்கப்பட வேண்டிய அந்த சின்னஞ்சிறு வயதிலே தனது விருப்பம்போல ஆடித்திரிந்தான் ஹென்றி. உயர உயரப் பறப்பதிலேதானே சிட்டுக்கு விருப்பம்! ஓடி ஓடி அலைந்தான் சிறுவனும். பதினைந்தாம் வயது வந்தது...பள்ளி வாழ்வுக்கு விடுதலை தந்துவிட்டு வெளியே வந்தான் ஹென்றி. அச்சடித்த புத்தகங்களிலே அவனது எண்ணம் பதிந்து அலுத்துப் போய்விட்டது மணியோசையைக் கேட்டுக் கேட்டு மனம் சலித்துவிட்டது ஆசிரியரின் போதனை போதுமெனக் கூறி வெளி நடந்தான்.

பள்ளியைவிட்டு வெளிநடப்புச் செய்த ஹென்றி, இந்தப் பரந்த உலகைப் பார்த்தான். இதிலேதான் எத்தனை எத்தனை வேடிக்கை மனிதர்களிருக்கிருர்கள்! இங்கே பணமுள்ளவனுக்குத்தான் எவ்வளவு பரிவு! அது இல்லாதவனுக்கோ...? ஹென்றியும் அந்த இரண்டாம் தரம்தானே! வாழ்வின் தொல்லைகளை அந்த இளம் பருவத்திலேயே அனுபவிக்கத் துவங்கினன். அவனது வேதனையைக் கண்டு இரக்கங்கொண்ட ஹென்றியின் தாய்மாமன், தனது மருந்துக் கடையிலே பணியாற்றும்படி ஏற்பாடு செய்தார். கிரீன்ஸ் போரோ (Greens Boro) விலிருந்த மருந்துக்கடையிலே ஹென்றி ஐந்து வருடங்களைத் தேய்த்தான். "என்னிடமிருக்கும் மருந்துகளை எடுத்து நோயாளிகளுக்குத் தந்துவிட்டு நீ மட்டும் தப்பிக்கொள்கிருயே, இதோ உனக்கும் மருந்து."

என்று கூறுவதுபோல மருந்துக்கடை காசநோயை பரிசாகத் தந்து ஹென்றியை டெக்ஸாஸுக்கே அனுப்பி வைத்தது. டெக்ஸாஸுக்குத் திரும்பிய பிறகு தகுந்த வைத்திய உதவியைப் பெற்று உடல் தேறினன் ஹென்றி. 'இல்லாதவனுக்கே எல்லா வியாதிகளும்' என்ற தத்துவத்தைப் படுக்கையிலேயிருந்தபோது தெரிந்துகொண்டான். படுக்கையை விட்டு எழுந்து அவன் நடமாடத் துவங்கியபோது, புதிய நம்பிக்கையோடு அடி எடுத்து வைத்தான். தனிப்பட்டவர்களின் அலுவலகங்களிலும் பின்னர் சர்க்கார் அலுவகத்திலும் சிலகாலம் குமாஸ்தாவாகப் பணிசெய்தான். அப்போது, அவனுக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களிலே பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளைக் கற்று வந்தான்.

அதன் பயனாக பத்திரிகைகளின் தொடர்பு ஏற்பட்டது ஹென்றிக்கு. அதைத்தொடர்ந்தே அவனதுபாதையிலே திருப்பமும் ஏற்பட்டது. பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதும் பழக்கமும் கை வந்தது. குறிப்பிட்டுச் சொல்லும் அளவிலே கருத்தைக் கவரும் கட்டுரைகளை அப்போது அவன் தீட்டவில்லை. நாளடைவிலே கொஞ்சங் கொஞ்சமாக அவனது எழுத்திலே மெருகு சேர்ந்தது. பெரிய விமர்சகர்களின் பார்வையிலே அவனது எழுத்துப் பட்டது அவனது கட்டுரைகளுக்காக ஏங்கி நிற்கும் வாசகர் வரிசை வளரலாயிற்று. அவனது கட்டுரைகளைத் தாங்கிவந்த பத்திரிகைகள் எண்ணிக்கையிலே பெருகலாயின.

அந்த நேரம் பார்த்து...அப்போது புகழ் வாய்ந்திருந்த 'தி டெயிலி போஸ்ட்' (The Daily Post)ஹென்றியைப் பயன்படுத்திக்கொண்டது. டெயிலி போஸ்டுக்கு வந்த பிறகு, புதிய பொலிவு பிறந்தது ஹென்றியின் எழுத்திலே. நாளும் நாட்டவர்களுக்கு நல்ல நல்ல சேதியைக் கூறிவந்தான். அந்த எழுத்திலே தெரிந்த வேடிக்கையையும், சில நேரங்களிலே வெடித்துக் கிளம்பிய எரிமலையையும், இன்னும் பல நேரங்களிலே தேன் சொட்டிய வார்த்தை அழகையும் ஒன்று சேர்த்து வாசகர்கள் ரசித்து வந்தனர். ஹென்றிக்கு பொற்காலம் உருவாகிய நேரம்!

அரசாங்கம் குறுக்கிட்டது, அவனது முந்திய செயலுக்கு விளக்கம் கேட்டு! ஹென்றி ஆஸ்டினிலிருந்தபோது, தேசீய பாங்கியிலே குமாஸ்தாவாகப் பணியாற்றினன். அப்போது நடந்த பணத்திருட்டுக்கு ஹென்றியின் சம்பந்தமுமிருக்கிறதென்ற காரணத்தைக் காட்டி அரசாங்கம் 'சம்மன்' தயார் செய்தது. அதை ஹென்றியிடம் நேரடியாகத் தருவதற்காக 'டெயிலிபோஸ்ட்' அலுவலகத்திற்கு போலீசார் வந்தனர். வந்தது ஆபத்து. ஹென்றிக்கு விடிவெள்ளி தோன்றிய அதே நேரமே, விஷப்புகையும் உயர எழுந்து போலாகியது ஹென்றிக்கு. தேசீய பாங்கியின் பண மோசடியைப் பற்றி ஹென்றி பின்னர் குறிப்பிட்ட போது, "எனது முட்டாள்தனத்தினல் ஏற்பட்ட விளைவுதான் அது. யாருடைய சதிக்கோ என்பங்கும் தேவைப்பட்டிருக்கிறது" என்று சொன்னன். அவனது உபதேசத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. போலீசார் வலைவீசித் தேடினர். ஹென்றி அகப்படவில்லை, தலைமறைவாக இருந்து கொண்டே தப்பிக் கொண்டிருந்தான்

இந்த நேரம் ஹென்றியின் மனைவி மரணப் படுக்கையிலே படுத்தாள். அவளது வாழ்க்கையின் கடைசி நேரத்திலே அவளருகே இருக்க விரும்பினன். எனவே, நீட்டிய துப்பாக்கிகளோடு வலம் வந்த போலீஸ் வீரர்களை மறந்து தனது வீடுநோக்கி வந்தான். செய்தியறிந்த போலீஸார் அவனது வீட்டை முற்றுகையிட்டனர். வீட்டினுள்ளே மெதுவாக அடியெடுத்து வைத்த ஹென்றி, தனது அன்பு மனைவியின், வாழ்வுக்குத் துணையாக வந்தவளின் கடைசிப் பார்வையை சந்தித்தான். அவளது கடைசி மூச்சு நின்று விட்டது. செத்த 'பிணமாக' படுக்கையிலே அவள் கிடந்தாள் சாகாத சவமாக இவன் நின்ருன்! வீட்டைச் சுற்றி நின்ற போலீஸாருக்கு இதயமிருந்தாலும் கடமையை மறந்திட முடியுமா என்ன! திடுமென உள்ளே பாய்ந்து ஹென்றியின் கைகளிலே விலங்கிட்டனர். தலைதாழ்த்தியிருந்த ஹென்றியின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் உருண்டு

(11 ப் பக்கம் பார்க்க)

ஓசிப் பொடி உதவாக் கரை!

"ஆசியாவின் சோதியை அறிவீரோ?"

"மனிதருள் மாணிக்கம் தெரியுமா?"

பாரத மாதாவின் தவப்புதல்வன் பார்த்தீரோ?"

"அகில உலக சமாதானத் தூதர் அறிவீரா?"

என்றெல்லாம் பண்டித நேருவுக்குக் கட்டியம் கூறுவர்-இங்கு. சந்தியில் திரியும் வந்தியர்!

அமெரிக்கர் அறிவுரை பெற்றனர்!
உருசியர் உள்ளம் தெளிந்தனர்!
பிரிட்டிஷார் பேதமை நீங்கினர்!
பிரான்சு பித்தம் தெளிந்தது!
செஞ்சீனு தெளிவு பெற்றது!

இப்படி உலகுக்குத் தனியொரு தலைவராய்-மாபெரும் அரசியல் நிபுணராய்-நேரு இலங்குவதாகப் பக்தர் குழாம் வாய்ப்பறை அடித்து வந்தது!

இத்தனைக்கும் காரணம்: நேருவுக்கு உலக வல்லரசுகள் கொடுத்த சேதி சொல்லும் (Messenger) அலுவல் தான்!

இந்த அலுவலின் பெருமைக்கு அளவு என்ன? ஊரில், செல்வாக்குப் பெற்றவர்கள் சிலர் இருப்பார்கள். அவர்களுக்குள் மனத்தாங்கல்-பகைமை ஏதாவது வந்தால் ஒருவருக்கொருவர் நேரில் பேசிக் கொள்வது நின்றுவிடும். ஒருவர்க்கொருவர் ஏதாவது சொல்ல-மிரட்ட-நேரிட்டால், எல்லாரிடமும் இச்சகம் பேசிக் காலம் தள்ளும் எவனையாவது அழைத்து;-

"ஏய் இந்தாப்பா! நீ தினம் மூக்குப் பொடி ஓசி வாங்கப் போவாயே மூலை வீட்டுக் காரனிடம்! அவன் கிட்டப் போயி, எருமை மாட்டை கவனமா மேய்க்கச் சொல்லு! நேற்று நம்ம வீட்டுச் சுவரிலே வந்து முதுகை உரசிக் கொண்டு நிற்குது. இனிமே, இப்படி உரசும்போது கண்டேனே எருமை. அவனுக்கில்லே! நான் சொன்னேன் இன்னு சொல்லிப் போடு' என்ன தெரிஞ்சுதா?

இப்படி ஓசிப்பொடி உதவாக்கரையிடம் சொல்லுவான்—பெரியதனக்காரன்.

மறுநாள் மூலை வீட்டுக்குப் போவான் ஓசிப்பொடி உதவாக்கரை. அங்கே பொடி வாங்கிக் கொண்டே சொல்வான்:-

"நேற்று மாடி வீட்டு முதலாளி கூப்பிட்டாரு! என்னன்னு போய்க் கேட்டேன். நம்ம எருமை மாடு அவங்க வீட்டுச் சுவருலே தினம் முதுகு தேய்க்குதாம் — ரொம்பக் கோபிச்சிட்டாருங்க"

"ஃஉம் ஃஉம் எருமை மாடு சுவரிலே உரசினால் அவன் மூஞ்சிலே உரசிற மாதிரி இருக்கோ? அவன் வீட்டு நாயி வந்து நம்ம திண்ணையிலே ஏன் படுக்குதுன்னு சொல்லு! தெரியுதா?

மறுநாள் மாடி வீட்டுக்குப் போவான், உதவாக்கரை! மூலைவீட்டு முதலாளி சொன்னதை அரைகுறையாகச் சொல்வான். அதைக்கேட்ட மாடிவீட்டான் எதையாவது சொல்லிவிடுவான்

இப்படியே, மாடி வீட்டுக்கும் மூலை வீட்டுக்குமாக இருப்பவன், ஊரில் பெரிய மனிதன் என்று சொல்லப் படுவான்?

இந்தச் 'சேதி சொல்லும் அலுவல்' தான், உலக வல்லரசுகளால் நேரு பண்டிதருக்கு உவந்தளிக்கப் பட்டது.

இந்த அலுவலை பண்டிதரின் பக்த கோடிகள் வானளாவ உயர்த்தி விட்டனர். இந்தியாவே உலகச் செல்வாக்குப் பெற்றிருப்பதாக உளறினர்கள்- உளறுகிறார்கள்.

"ஊரில் - உலகத்தில் ஒருவருக்கொருவர் பகைவளர்ந்து முட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில், பெரிய மனிதர்கள் தலையிட்டு பஞ்சாயம் செய்து பகையைப் போக்கி உறவு கொள்ளும்படி செய்வதில்லையா?" என்று கேட்கலாம்!

ஆம்: பஞ்சாயம் செய்து பகைதீர்ப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அந்தப் பஞ்சாயம் பண்ணும் பெரிய மனிதர்களுக்குச் சில தகுதிகள் இருக்கும்.—இருக்க வேண்டும்!

பஞ்சாயத்துச் செய்கிறவன் பகைத்துக் கொண்டிருப்பவர்களை விட எல்லா வகையிலும் மேம்பட்டவனாக இருக்க வேண்டும்.

கல்வி

அறிவு

இராஜ தந்திரம்

பகையாளரின் பலவீனப் பகுதியை அறிந்திருத்தல்

பகையாளர் இருசாராரின் உறவையும் பெற்றிருத்தல்.

பகையாளர் இருசாராரும் மீற முடியாத ஏதாவது தகுதி—பிடி.

பகையாளரைத் தேடிப் போக வேண்டிய அவசியமில்லாத எதற்கும் எதிர்பாராத-கம்பீரம் வாய்ந்த வாழ்வு. இத்தகைய மேம்பாடு உள்ள ஒருவன் தான் பஞ்சாயத்துச் செய்யலாம்-செய்ய முடியும்!

முன்கண்ட மூலை வீட்டானுக்கும் மாடி வீட்டானுக்கும் மனத்தாங்கலைத் தீர்க்க வேண்டுமானால், அவர்கள் இரண்டு பேருக்கும் மிக மிக வேண்டிய ஒருவன்-இரண்டு பேருக்கும் இடையில் சமூக பொருளாதாரத் தொடர்பு கொண்ட ஒருவன்-இரண்டுபேரும் எந்தக் காரியத்திற்கும் வேண்டப்படுகிற ஒருவன் — அவர்களைவிட செல்வம் செல்வாக்குடைய ஒருவன், இரண்டு பேரையும் அழைத்து நீ இதை விட்டுக் கொடு! அவன் அதை விட்டுக் கொடுப்பான்! நான் சொல்வதை கேட்டுக் கொள்ளாமல் நாறிக் கொண்டிருந்தீர்களோ? நான் கெட்டவனாகிவிடுவேன்!

நீ, கேட்கவில்லை என்றால், என்னிடம் கடன் வாங்கிய 6000-மும் வட்டியுடன் உடனே செலுத்தியாக வேண்டும்!

அவன், கேட்கவில்லை என்றால், அவனுடைய வேலாவடி நன்செய்க்கு நாளை முதல் ஒழுங்காகத் தண்ணீர் பாயாது! என்ன சொல்கிறீர்கள்? என்று, இவைபோல், அவர்களின் பலவீனமறிந்து எதையாவது சொல்லி, அதட்டியும் அறிவுரை கூறியும் திருத்த முயன்றால், இரண்டு பேரும் எப்படியோ ஒரு வழியாக பகையை விடுவார்கள்!

ஓசிப் பொடி உதவாக்கரை சொல்வதற்காகப் பகைமை மாறுமா? உதவாக்கரை நிலை என்ன?:—

உதவாக்கரைக்குத் தலைக்கு மிஞ்சிய கடன்! அந்தக் கடனில் பாதியை, மூலை வீட்டுக்காரனிடமும், மற்றொரு பாதியை, மாடி வீட்டுக் காரனிடமும் வாங்கியிருக்கிறான்! இது தவிர அன்றாடம் மூக்குப் பொடிக்கு மூலை வீட்டானிடம் ஓடுவான்! மாட்டுத் தீனிக்கு மாடி வீட்டானிடம் ஓடுவான் எல்லாருக்கும் கூழைக் கும்பிடுபோட்டு நல்லவனாக நடந்து கொள்வான்! "நமக்கேனய்யா மற்றவன் பொல்லாங்கு! நமக்கு எல்லாரும் வேணுமய்யா!" என்று சமரச ஞானம் பேசுவான்! இந்த சமரச ஞானமும், கூழைக் கும்பிடும், எல்லாரிடத்திலும் போய் ஏழ்மைக்கு உதவி கோரப் பயன்படலாமே தவிர, பெரியதனக் காரர்களின் பகையைப் போக்க உதவுமா? வாழ்வியல்—உலகியல் அறிவு பெற்ற எவரும் மறுக்க முடியாது இதை!

பண்டித நேருவுக்கும் ஓசிப்பொடி உதவாக்கரைக்கும் உத்தியோகம் ஒன்றுதான்! அளவில்-தரத்தில் வித்தியாசமே தவிர, தன்மையில் ஒன்றே!

உதவாக்கரைக்கு ஊரில் உத்தியோகம்! நேருவுக்கு உலகத்தில் உத்தியோகம்! உதவாக்கரைக்கு மூலை வீட்டானிடமும் மாடிவீட்டானிடமும் பெருங்கடன்! நேருவுக்கு உருசியாவிடமும் அமெரிக்காவிடமும் பெருங்கடன்!

ஊரில் மாடி வீட்டுக்கும் மூலை வீட்டுக்கும் சண்டை! உலகில் அமெரிக்காவுக்கும் உருசியாவிற்கும் பகை!

வடநாட்டு எத்தர்களின் நல்வாழ்வுக்காக இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும், டாலர் பிரதேசத்திலும், ரூபிள் பிரதேசத்திலும், ஈடு வைத்து 2 ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு வாங்கிய கடன் கொஞ்ச நஞ்சமல்ல—ஏறக்குறையப் பத்தாயிரங் கோடி ரூபாய்கள்!

இது தவிர, ஆண்டு தோறும் கோதுமையும். பால்பொடியும் பிறவும் பிச்சை போடுகின்றன அந்த நாடுகள்! ஓசிப்பொடி உதவாக்கரைக்குப் போடுவது போல!

இத்தகைய நிலையில் உள்ள நேரு, என்ன செய்ய முடியும்?

ஐ. நாவில் நேரு நடந்து கொண்ட விதம் சாதாரண அறிவுடைமை வாய்ந்ததாகக் கூட இல்லை—இராஜ தந்திரத்திற்கு எங்கே போவது?

முதலில், பகைமை கொண்டிருப்பவர்களின் நெஞ்சாழத்தையும் வலிமையையும் பகை வளர்ந்த வரலாற்றுடன் சேர்த்து ஆராயவேண்டும்!

இந்தப் பகை 2-ம் உலகமகாயுத்தத்திற்கு முன்னரே தோன்றியது பகையின் காரணம்: 'உலகில் தனி உடமை நிலைப்பதா? பொது உடமை தழைப்பதா?' என்பதே!

1918-ல் நடந்த உருசியப் புரட்சிக்குப் பின்னர். பொது உடமைத் தத்துவம் நிலைக்காது—பொசுங்கிப் போய்விடும் என்றே தனி உடமை நாடுகள் அலட்சியமாக இருந்தன! ஆனாலும், பொது உடமை ஆட்சியைப் பற்றி கசப்பும், கவனமும் அவற்றின் நெஞ்சில் நிறைந்திருந்தன!

இந்த நிலைமையிலேயே 1938-வரை ஒருவாறு கழிந்தது அப்போதுதான் தனி, பொது உடமைகளுக்கு விரோதமான—மூன்றாவது சக்தியாக—ஃகிட்லரின் 'நாசிசம்' அஞ்சத்தக்க வலிமையுடன் சீறிக்கிளம்பியது!

நாசிசம் ஒழிக்கப்படாவிட்டால், தனி உடமையும் தொலைந்து போகும், பொது உடமையும் தொலைந்துபோகும் என்கிற எண்ணம், உருசியருக்கும் அமெரிக்கருக்கும் ஏற்பட்டது.

அதற்கேற்ப உருசியாவைத் தாக்கினான் ஃகிட்லர்! நேச நாடுகளின் அணியில் உருசியா சேர்ந்து கொண்டு போராடிற்று—நிர்ப்பந்தத்தால்!

உருசியா கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தபோது, தாக்குதலின் கடுமையைக் குறைப்பதற்காக, 2-வது போர்க்களம் ஏற்படவேண்டும் என்று கண்ணீர் விட்டுக் கதறினான் ஸ்டாலின்!

ஆனல் ஸ்டாலின் வேண்டுகோள், செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. எப்படியோ உருசியா சமாளித்தது! இறுதியில் நேச நாடுகள் வென்றன! ஃகிட்லர் அழிந்தான்!

போர் முடிந்த உடனே போரைப் பற்றிய விமர்சனங்கள் எழுந்தன. அதில். குறிப்பிடத்தக்கது:—

"போரின்போது உருசியாவுக்கு ஆதரவாக 2-வது போர்க்களம் ஏற்படுத்தாமல் நேச நாடுகள் தட்டிக் கழித்த காரணம்: உருசியா அழிந்த பிறகு ஜெர்மனியை அழித்தால், ஒரே கல்லில் இரண்டு பறவைகளை வீழ்த்தியதாகும்—அல்லது உருசியாவே தனித்து நின்று வென்றாலும்—அதனுடைய வலிமையைப் பெருமளவு இழந்துவிடும்—இழக்கட்டும்! பொது உடமை வளர்ச்சி ஒழியட்டும்! அல்லது தாமத மாகட்டும்!"

இந்த உள்ளெண்ணந்தான் 2-வது போர்க்களம் தோன்றாமைக்குக் காரணம் என்று, உருசியா குற்றம் சாட்டியது!

2-ம் உலகப்போரில் ஜப்பானின்மேல் விடுத்த அமெரிக்க அணுக்குண்டு-அதன் பேராற்றல் — உருசியாவுக்கு அதிர்ச்சியையும் விஞ்ஞான வேட்கையையும் உண்டாக்கி விட்டிருக்க வேண்டும்!

ஏனெனில்அதுவரை விஞ்ஞானத்தில் தீவிரம் காட்டாமல் இருந்த உருசியா, அதன் பிறகுதான் தீவிர விஞ்ஞான ஆராய்ச்சியை மேற்கொண்டது. அதன் பயனாக நீர்வளிக்குண்டு கண்டு பிடிக்கப்பட்டது!

ஆனால், நீர்வளிக் குண்டுடன் உருசியா ஓயவில்லை! தொடர்ந்து பல சாதனங்களை—வல்லரசுகள் மிரளத்தக்க சாதனங்களை—கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறது! அவற்றில் ஒன்றுதான் சந்திர மண்டலப் பயணம்! சந்திர மண்டலப் பயணம் உருசியாவிற்கு விஞ்ஞானத்தின் உலக ரிக்கார்டு ஆகிவிட்டது!

இத்தகைய விஞ்ஞான வெற்றியுடன் சீனவும் உருசிய அணியில் இருப்பதால், அதனுடைய ஆட்பலமும் அதிகம் என்றே சொல்லவேண்டும்.

நடுநிலைமை நாடுகளை நீக்கி, அமெரிக்க அணியிலிருக்கும் ஆட்பலம் உருசிய அணியுடன் ஒப்பிடும்போது குறைவென்றே சொல்லவேண்டும்.

இவைகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து மனத்தில் வைத்துக்கொண்டுதான் உருசியா அமெரிக்க அணிவகுப்பை அலட்சிய நோக்குடன் பார்க்கிறது! அந்த அலட்சியத்தின் அறிகுறிதான், ஐ. நா வில் குருசேவ் புரிந்த ஆரவாரம்!

அதே நேரத்தில் அமெரிக்கா நிலைமை என்ன? உருசியாவில் வேவு பார்க்க வந்த ஒற்றன் அகப்பட்டுக் கொண்டான்!

அவனை, 'யாரோ எவனோ' என்று ஆராயாமல்—அவசரத்தில் — மழுப்ப முயன்ற—அமெரிக்கா, தக்க ஆதாரங்களுடன் உருசியா மெய்ப்பித்து விடும்.

(11-ம் பக்கம் பார்க்க)

அருப்பைக் கிழார்

மல்லிகைப்

26. பட்டணத்துத் தோழி மலர்க் கொடி.

தங்கம் நெடுநேரம் உணர்வற்றிருக்கவில்லை. திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சி கலந்த அச்சத்தால் அவள் உணர் விழந்து வீழ்ந்தாள் எனினும் விரைவில் அவளுக்குத் தன்னினைவு ஏற்பட்டு விட்டது.

தங்கம் கண்விழித்துப் பார்த்த போது, இரண்டு ஆட்கள் அவளைத் தூக்கிக் கொண்டு போவதை உணர்ந்தாள். மெல்லத் தன்கண்களைத் திறந்த தங்கம் மேலும் அகலமாக அவற்றை விரித்து, என்ன நடக்கிறது என்பதையறிய முற்பட்டாள்.

அவர்கள் தங்கத்தை மாளிகையை நோக்கியே தூக்கிக் கொண்டு போனார்கள் சுந்தரேசனுடைய ஆட்களாக இருந்தால் அவர்கள் மாளிகைக்குத் தன்னைத் தூக்கிச் செல்வது அருத்தமற்றது என்பதை அறிந்த தங்கம், தன்னைத் தூக்கிச் செல்லும் ஆட்களைக் கவனித்தாள். ஆனால், இருட்டில் அவர்களுடைய உருவம் சரியாகப் புலப்படவில்லை.

மாளிகை வாசலை யடைந்து அவர்கள் கதவைத் தட்டிய போது, கந்தசாமி வாத்தியார் தான் வந்து கதவைத் திறந்தார். அவர்கள் யாரையோ தூக்கிக் கொண்டு வந்ததைப் பார்த்த அவர் அது தங்கமாகத் தான் இருக்க வேண்டும் என்று யூகித்துக் "கண்டுபிடித்து விட்டீர்களா? என்தங்கம் எப்படியிருக்கிருள்?" என்று பதட்டத்தோடு கேட்டார். தூக்கி வரப்பட்ட நிலையில் தங்கத்திற்கு ஏதாவது விபத்து அல்லது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்று அவர் பயப்பட்டார். ஆனால் தூக்கி வந்தவர்கள், "கவலைப் படாதீர்கள்! ஆபத்து ஒன்றுமில்லை. இலேசான மயக்கம். அவ்வளவு தான்!" என்று கூறிக் கந்தசாமி வாத்தியாரைச் சமாதானப் படுத்தினார்கள்.

பிறகு உள்ளே கொண்டு போய் விளக்கெரிந்து கொண்டிருந்த ஓர் அறையில் தங்கத்தைப் படுக்க வைத்தார்கள். தன்னைத் தூக்கி வந்தவர்கள் யார் என்று அறிந்து கொள்வதற்காகத் தங்கம் மீண்டும் கண்களை அகலத் திறந்தாள்.

அவளைத் தூக்கி வந்தவர்கள் வேறு யாருமல்ல, போலீஸ்காரர்கள்! போலீஸ்காரர்கள் கையில் அகப்பட்டதைப்பற்றித் தங்கம் மகிழ்ச்சியடைந்தாள். தங்கம் கண் விழித்ததைப் பார்த்ததும் அந்த அறைக்கு வந்திருந்த மரகத அம்மாள், "தங்கம், எங்களை யாரிடமும் சொல்லாமல் எங்கேயம்மா போனாய்?" என்று விசாரித்தாள்.

தங்கம் நடந்தவற்றையெல்லாம் சொன்னாள். ஆனால், சுந்தரேசனைப் பற்றி மட்டும் எதுவும் கூறவில்லை. அவன் பெயரை மறைத்துவிட்டு யாரோ ஒருவன் யாரோ ஒருவன் என்றே தெரியாத பாவனையாகக் குறிப்பிட்டுப் பேசினாள் தங்கம். சுந்தரேசன் மீது அவளுக்கு இன்னும் ஏதோ ஒரு விதமான பிரேமையிருந்தது என்பதையே அவளுடைய போக்கு எடுத்துக் காட்டியது. ஆனால், அது மற்றவர்களுக்குத் தெரியாது. அவர்கள் தங்கத்தைத் தேடியதுபற்றி அவள் கேட்காமலே மரகத அம்மாள் கூறினாள். அவர்கள் தங்கத்தைத் தேடிக்கொண்டிருந்த விஷயம் எப்படியோ, அந்தவூர் இன்ஸ்பெக்டருக்குத் தெரிந்து, அவர் போலீஸ்காரர்களை விட்டுப் புலன் விசாரிக்கச் சொல்லியிருக்கிருர் அப்படி விசாரணையில் ஈடுபட்ட போலீசார் தான், யாரோ ஒரு கிராம வாசியின் மூலம் தங்கம் காட்டு வழியாகக் கடத்திச் செல்லப்பட்ட விஷயத்தையறிந்து கொண்டிருக்கிருர்கள். அவர்கள், தங்கத்தைக் கண்டு பிடிக்கக் காட்டையலசிக்கொண்டிருந்த போது வழியில், காட்டுப் பிள்ளையார் கோயிலிலிருந்து திரும்பிய ஜீப்பை வழிமறித்திருக்கிருர்கள். அந்த ஜீப்பும், அதில் இருந்த பொருள்களும், அது வந்த வேகமும் போலீஸாரின் சந்தேகத்திற் கிடமளித்திருக்கிறது. உடனே அவர்கள் ஜீப்பிலிருந்த ஆட்களை, போலீஸ் நிலையத்தில் அடைத்துவிட்டு, மீண்டும் அந்த ஜீப்பிலேயே தங்கத்தின் வீட்டில் விசாரணை செய்ய வந்திருக்கிருர்கள் இதிலே தங்கம் கேட்டதிசயித்த விஷயம் என்னவென்ருல், தான் சுந்தரேசன் பெயரை மறைத்தது போலவே அந்த ஆட்களும், போலீசார் அடிதடிக்குப் பயந்து எல்லா விஷயங்களையும் உளறிய போதிலும் சுந்தரேசன் பெயரை மறைத்தே சொல்லியிருக்கிருர்கள்.

விசாரித்து விட்டுக் கிளம்பிய போலீஸ்காரர்கள் தான், தங்கத்தைத் தேடிவருவதற்காக ஜீப்பைக் கிளப்பிக் கொண்டு போக வெளியே வந்திருக்கிருர்கள். ஆனால், தேடிப் போன பொன்னே தம்மைத் தேடி வந்ததைப் போல், தங்கமே தங்கள் எதிரில் வந்து நிற்பதைக் கண்டு அவர்கள் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள்.

கடைசியில் அந்தப் போலீஸ்காரர்கள் தங்கத்தை ஒப்படைத்து விட்டு விடை பெற்றுக் கொண்டு சென்ருர்கள். கந்தசாமிப் பண்டிதரும், மரகத அம்மாளும். தங்கம் ஒரு பெரிய இக்கட்டிலிருந்து தப்பியதை எண்ணி மகிழ்ச்சிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார்கள். தங்கத்தைக் காப்பாற்றிய அந்த இளைஞனைப் பற்றி நினைக்கும் போது அவர்களுடைய உள்ளத்திலே ஏதோ ஒரு விதமான கிளர்ச்சி ஏற்பட்டது. தங்கம் சொல்லிக் காட்டிய பிறகு அன்று காரில் முருகேச வாத்தியாருருக்கு இடங் கொடுத்து விட்டுப் போன இளைஞன் அவனாக இருக்கக் கூடும் என்று எண்ணம் தெரிவித்த பிறகு அவர்கள் அவனுடைய உருவத் தோற்றத்தை நினைத்து நினைத்துப் பார்த்தார்கள். ஆனால். அந்த இளைஞன் யார் என்று அவர்களால் யூகித்தறிய முடியவில்லை.

தங்கம் காணமற்போய், இன்னலுக்காட்பட இருந்து திரும்பி வந்தநினைப்பு இரண்டொரு நாட்கள் வரையில் அவர்கள் உள்ளத்தில் குறுகுறுப்பாகவும் உறுத்தலாகவும் இருந்துகொண்டிருந்தது. ஆனால், அதன் பிறகு பையப் பைய அதன்வேகம் தணிந்துவிட்டது. அதைப் பற்றிய எண்ணமேகூட மறைந்து மறக்கப்பட்டுப் போய் விட்டது.

தங்கம் காணமல் போய்விட்ட செய்தியறிந்தபின் அண்ணமலைப் பண்டிதர் — அதுதான் கயிலாயம் மனத்தை யலட்டிக்கொள்ளவில்லை. ஆனால், யாரோ முரடர்கள் அவளைத் தூக்கிக்கொண்டு போய்க் கட்டாயத் திருமணம் செய்ய முற்பட்டார்கள் என்ற செய்தி கேட்டவுடன், இது சுந்தரேசன் ஏற்பாடுதான் என்று அவர் யாரும் சொல்லாமலே தெரிந்து கொண்டார், பாம்பறியும் பாம்பின் கால் என்றதுபோல், தனக்குப் பிறந்தவனுடைய குணத்தை அவர் நன்கு தெரிந்துகொண்டுவிட்டார். ஆனால், அவர் மற்றவர்களைப்போல் கண் கலங்கவில்லை. என்ருலும், தங்கம் காணமற் போய்த் திரும்பி வந்தது முதல், சிறிதும் கலகலப்பில்லாமலும் சிந்தனையே வயப்பட்டவராகவும் இருந்துகொண்டிருந்தார்.

வெள்ளிக்கிழமை வந்துவிட்டது. சொல்லிச் சென்றபடி ராதாவும் நெய்யூரிலிருந்து தன் தாய் தந்தையரிடம் அனுமதி வாங்கிக்கொண்டு வந்து விட்டாள். அண்ணமலைப்பண்டிதர் சென்னை செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். மரகத அம்மாளும், கொண்டு செல்வதற்கு வேண்டிய சாமான்களையெல்லாம் எடுத்து வைத்துப் பெட்டி படுக்கைகள் தயாரித்துக்கொண்டிருந்தாள். இரவு புறப்படும் இரயிலுக்குப் போக அவர்கள் அதிகாலையிலிருந்தே ஆயத்தமானர்கள்.

இரவு எட்டு மணிக்கு வண்டி, அதற்கு ஆறு மணிக்கே மாட்டு வண்டிகளில் அவர்கள் புறப்பட்டார்கள். கந்தசாமி வாத்தியார் மட்டும் தான் மாளிகையில் மீதி. அவரும், மறுநாள் தாம் நெய்யூருக்குப் போய் விடப் போவதாகச் சொல்லி விட்டார். மறுபடியும் தோட்டக் காரச் சுப்பையா வசம் மாளிகையை ஒப்படைத்து விட்டு, எல்லோரும் இரயிலடிக்குப் போனர்கள்.

கந்தசாமி வாத்தியார் பிளாட்பாரத்தில் நிற்க, கயிலாயம், மரகதம், தங்கம், ராதா, ஆகியவர்கள் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். மரகத அம்மாள் தான் வாழ்க்கைப்பட்ட பிறகு ஒரு முறைகூடத் தன் கணவனை விட்டுப் பிரிந்ததேயில்லை. ஆனல் இப்போது, புதிதாக அவரைப் பிரிந்து போவது அவளுக்குப் பெருந் துக்கமாயிருந்தது. கந்தசாமி வாத்தியாரைப் பார்த்து மாலை மாலையாகக் கண்ணீர் விட்டாள். அவளுக்கு வண்டியை விட்டு இறங்கிகொண்டு விடலாமா என்றுகூடத் தோன்றியது. ஆனல் கந்தசாமி வாத்தியார் பல மாதிரியாகச் சமாதானம் சொல்லி அவளைத் தங்கத்துடன் அனுப்பி வைத்தார். கந்தசாமி வாத்தியார் உறுதி குலையாதவராகத் தான் இருந்தார். ஆனல், வண்டி நகர்ந்த பிறகு அவருக்கும் இரண்டு சொட்டுக் கண்ணீர் ஊறித் துளிர்த்து விட்டது. தெரியாமலா, பிரிவு பெருந் துன்பம் என்று நூலோர்கள் கூறியிருக்கிருர்கள்!

சென்னைக்கு வந்ததும், அண்ணமலைப் பண்டிதர் முதலில், தங்கத்தை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு வக்கீல் வீட்டுக்கும், அரசாங்க அலுவலகங்களுக்குமாக அலைந்தார். மரகத அம்மாளும், ராதாவும் ஜமீந்தார் கருணகரருடைய பட்டணத்து மாளிகையிலேயே, தங்கியிருந்தார்கள் ஒவ்வொரு நாளும் மாலையில் வீட்டுக்குத் திருப்பி வந்தவுடன் தங்கம், தான் போய் வந்தது பற்றி அவர்கள் இருவருக்கும், ஏன் ஜமீந்தாரிணியம்மாளுக்கும்கூடச் சொல்லுவாள். மீதி நேரமெல்லாம், மரகத அம்மாளுக்கும், ராதாவுக்கும் ஜமீந்தாரிணியம்மாளுக்கு வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்வதிலேயே கழிந்தது.

எல்லா வேலைகளும் முடிந்த பிறகு ஒருநாள், வக்கீல் வேலாயுதம் அவர்கள் எல்லோரையும் தமது வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தார். ஜமீந்தார் கருணகரர் ஜமீந்தாரிணி பெரியம்மாள், கயிலாயம், மரகத அம்மாள், தங்கம், ராதா எல்லோரும் வழக்கறிஞர் வேலாயுதம் வீட்டுக்கு விருந்துக்குச் சென்ருர்கள். விருந்துக்கு அவர்கள் மட்டுந் தான் சென்றிருந்தார்கள் என்று சொல்ல முடியாது. வழக்கறிஞருக்கும், ஜமீன்தாருக்கும், பழக்கமானவர்கள் பலர் குடும்பங்குடும்பமாக வந்திருந்தார்கள். ஆனல், அன்று விருந்தில் உபசாரத்திற்கு நடுநாயகமாக விளங்கியவர்கள் கயிலாயமும், கருணகரரும் தான்!

விருந்து இரவு நேரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வழக்கறிஞர் மாளிகையின் வாசல் வளைவிலேயே பன்னிற மின்னொளி விளக்குகள் அதியற்புதமான வண்ணக் கதிர்களை வீசிக் கொண்டிருந்தன. மாளிகையின் உட்புறத்திலோ, வரவேற்புக் கூடம், விருந்து மண்டபம் முதலிய இடங்கள் பட்டப் பகலென ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தன. ஆடவரும் பெண்டிரும் அலங்காரமான உயர்தர ஆடைகளும் அணிமணிகளும் அணிந்து, உல்லாச இன்பத்துடன் திகழ்ந்தனர். கூடிக் கூடிப் பேசுவோரும், கோதையரைத் தேடிச் சென்று பேசிச் சிரிப்பாரும், இன்னும் பலவிதமான முறையில் ஒருவரையொருவர் நலம் விசாரிப்பாருமாக ஆண்களும் பெண்களும் ஒருவருடன் ஒருவர் கூடி யுறவாடிய காட்சி இனிமையானதாக விருந்தது.

விருந்துச் சாப்பாடு அருமை அருமையென்று பாராட்டும்படியாக அமைந்திருந்தது. விருந்து முடிந்தவுடன் வழக்கறிஞர் வேலாயுதத்தின் மகள், பதினெட்டு வயதான பச்சைப் பசுங்கொடி போன்ற மலர்க்கொடி, இனிய பாடல்கள் பாடி, வந்திருந்த விருந்தினரை மகிழ்ச்சி செய்தாள்.

அவள் பாடுவதாக முன்னேற்பாடு ஒன்றும் கிடையாது. ஆனல், அங்கு

பந்தல்

நாரா நாச்சியப்பன்.

வந்திருந்தவர்கள் அவள் பாட்டுப் பயிற்சியும், இனிய குரலும் உடையவள் என்பதையறிந்து, வற்புறுத்தியதன் பேரில், முதலில் நாணிக் கோணி மறுத்துக் கடைசியில் பாடத் துவங்கினாள். அப்படியொன்றும், போற்றிப் புகழ்ந்து பாராட்டக்கூடிய அளவு அவள் அழகியல்ல என்றாலும், பருவப் பூரிப்பு அவள் முகத்திற்கு அலாதியான ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அவள் குரலோ நாள் முழுவதும் கேட்டுக்கொண்டேயிருக்கும்படி உள்ளத்திலே வேட்கையை எழுப்பக் கூடிய அளவு இனிமை பொருந்தியதாக இருந்தது. இதுபோன்ற இனிய இசையை தங்கம் இதற்குமுன் எங்கும் கேட்டதில்லை. மலர்க்கொடியின் அமுதமயமான இசைக் குரலில் தங்கம் அப்படியே சொக்கிப் போய்விட்டாள்.

மலர்க்கொடி பாடிய நேரம் முழுவதும் தங்கம் அவள் வாயையே பார்த்துக்கொண்டு அங்காந்தபடியிருந்தாள். அவள் இவ்வுலகையே மறந்துவிட்டாள்-மலர்க்கொடியின் பாட்டில்-அதன் இசையில் அப்படியே கலந்து போய் இருந்தாள் என்றே சொல்ல வேண்டும்,

மலர்க்கொடியின் முகத்தில் வைத்த கண் மாறாது உட்கார்ந்திருந்த தங்கம், திடீரென்று, தான் பார்த்துக்கொண்டிருந்த முகத்தில் ஓர் உணர்ச்சி-இன்பத்தை யள்ளித் தெளிப்பதுபோன்ற ஓர் உணர்ச்சி மின்னிட்டுத் தோன்றுவதைக் கண்டாள் மலர்க்கொடி, அந்த மண்டபத்திற்குள் நுழைந்த யாரையோ, மனங்கனிந்து இன்பந் துள்ளிக் குதிக்கும் ஆனந்த உணர்ச்சியுடன் வரவேற்பது போலிருந்தது பாடிக்கொண்டிருந்தபோதே அவள் முகத்தில் வெளிப்பட்ட அந்தக் குறிப்பைக் கண்ட தங்கம், சட்டென்று மண்டப வாயிற் பக்கம் திருப்பிப் பார்த்தாள்.

இதென்ன இது! உண்மைதானா? இல்லை, தங்கம் கனவு காண்கின்றாளா? அவள் கண்டது யார்? அந்த இளைஞன் தான்! தன்னைத் தக்க சமயத்தில் வந்து காப்பாற்றிய அந்த மர்ம இளைஞன்தான் அது!

இவன் எப்படி இங்கே வந்தான்? மலர்க்கொடி அவனை ஏன் இப்படி ஆனந்தம் பொங்க, பாட்டுக்கு மத்தியிலும் அன்புடன் வரவேற்க வேண்டும்! அவளுக்கும் அவனுக்கும் என்ன உறவோ?

திரும்பிப் பார்த்த தங்கத்தின் உள்ளத்தில் இத்தனை கேள்விகளும் எழும்பின. ஆனால், அவற்றிற்கெல்லாம் தக்க பதில்தான் கிடைக்கவில்லை

வந்த அந்த இளைஞன் விருந்தினரிடையே வேறு யாரும் கவனியாமலே அமர்ந்துவிட்டான். தங்கமும், பின்னால் திருப்பிய தன் முகத்தை மீண்டும் மலர்க்கொடியின் பக்கம் திருப்பிக் கொண்டாள். பாட்டு முடிந்தவுடனே, தங்கம் ஆவலோடு பின் பக்கம் திருப்பிப் பார்த்தாள், ஆனால், அவள் ஏமாற்றத்தைத் தான் சந்திக்க நேர்ந்தது. ஏனென்றால் அந்த இளைஞன் அங்கே காணப்படவில்லை.

தங்கத்திற்கும் ராதைக்கும் மலர்க்கொடி மிகுந்த நட்புடையவளாகி விட்டாள். மற்ற விருந்தினரெல்லாம் சென்றபின் அவர்கள் ஒருவருடன் ஒருவர் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சிறிது நேரத்திற்குள்ளேயே அவர்களுக்கிடையே பலமான நட்பு ஏற்பட்டு விட்டது. ஆயிரம் ஆண்டுகள் பழகியவர்களைப் போல அவர்கள் ஒருவருடன் ஒருவர் மனம் விட்டுப் பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள். மூன்று பெண்களும் பேசிக் கொண்டிருந்த போது அந்தப் பக்கமாக வந்த கயிலாயமும் வழக்கறிஞர் வேலாயுதமும், இந்தப் பெண்கள் எப்படித்தான் இவ்வளவு சீக்கிரமாகப் பழக்கம் ஏற்படுத்திக் கொள்கிறார்களோ என்று பெண்கள் இயல்பைப் பற்றியே ஓர் ஆராய்ச்சி செய்து கொண்டு வந்தார்கள்.

அவர்கள் இருவரையும் கண்டவுடன், மலர்க்கொடி தன் தந்தையை, நோக்கி "அப்பா இவர்கள் இருவரும் இதற்கு முன் பட்டணத்துக்கே வந்ததில்லையாம். ஊர்சுற்றிப் பார்க்க வேண்டுமாம்" என்று செல்லமாகக் குழைவான குரலில் கூறினாள். 'உன் காரில், நானே அவர்களை ஏற்றிக் கொண்டு ஊரெல்லாம் சுற்றிக் காண்பித்துவிட்டு வாயேன்!' என்று வழக்கறிஞர் கருத்துரைத்தார்.

உடனே மலர்க்கொடி தங்கத்தையும், ராதாவையும்நோக்கி, "அப்படியானால், நாளைக்கு என்னோடு வருகிறீர்களா?" என்று கேட்டாள்.

'சரி' என்பதைத் தவிர அவர்கள் அந்த அன்பழைப்புக்கு வேறு மறுமொழி என்ன சொல்ல முடியும்!

மறுநாள் காலை ஒன்பது மணிக்கெல்லாம் அவர்கள் புறப்படுவதென்று பேசிக் கொண்டார்கள். அதன்படி மறுநாள் காலையில். மலர்க்கொடி வீட்டில் அவர்களைக் கொண்டு போய் விடுவதற்காக கயிலாயமும் அவர்களுடன் புறப்பட்டுக் கொண்டிருந்தார். மரகதஅம்மாளைக் கூப்பிட்டதற்கு அவள், தலை நோவதால், தான் வரவில்லை என்று கூறிவிட்டாள், கயிலாயத்துடன், தங்கமும் ராதாவும் புறப்பட்டு வீதிக்கு வந்து வாடகைக் கார் அமர்த்திக் கொண்டு போவதற்காக ஏதாவது கார் வருமா என்று காத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அவர்கள் எதிரில் அழகான ஒரு கார்வந்து நின்றது. அதை ஒரு பெண் ஓட்டிக் கொண்டு வந்தாள். அவள் காரிலிருந்து இறங்கிய பிறகு தான் அது மலர்க்கொடி என்று தெரிந்து கொண்டார்கள் உடனே தங்கமும் ராதையும் அவளை ஓடிப் போய்க் கட்டிக் கொண்டார்கள். "மலர்க்கொடி. உனக்குக் காரோட்டக் கூட தெரியுமா?" என்று வியப்புடன் கேட்டாள் ராதா.

பதிலுக்கு ஒரு புன்னகையைத் தான் உதிர்த்தாள் மலர்க்கொடி.

'சரி, நீங்கள் போய் வாருங்கள்!,' என்று கூறிவிட்டு கயிலாயம் வீட்டின் உள்ளே போய்விட்டார்.

தங்கமும் ராதாவும், காரில் பின்புறமாக ஏறிக் கொண்டு மலர்க்கொடி முன்னால் ஏறி உட்கார்ந்து காரை ஓட்டிச் சென்றாள்.

பாதி தூரம் சென்றதும், 'எங்கே போக வேண்டும்?" என்று மலர்க்கொடி கேட்டாள்.

"எங்களுக்கென்ன தெரியும்? நீதான் எங்காவது கூட்டிக் கொண்டு போக வேண்டும்' என்று தங்கம் சொன்னாள்.

"சூவுக்குப் போகலாமா?" என்று கேட்டாள் மலர்க்கொடி.

"சூவா? அது என்ன?" என்று ராதா புரியாமல் கேட்டாள்.

"மிருகக் காட்சி சாலை" என்று என்று மலர்க்கொடியிடமிருந்து பதில் வந்தது.

உடனே தங்கமும் ராதாவும் அங்கே போகலாம் என்று கூறினார்கள்.

கார் மிருகக் காட்சி சாலைக்கு வந்து சேர்ந்தது.

மூன்று பெண்களும், மிருகக் காட்சி சாலையில் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தார்கள். அதில் பாதிப் பொழுது போய் விட்டது.

"சரி, போதும் வீட்டுக்குப் போகலாம்" என்றாள் தங்கம்.

"இன்னும் மற்றதெல்லாம் பார்க்க வேண்டாமா?" என்று கேட்டாள் மலர்க்கொடி.

"பார்க்கலாம், போய்ச் சாப்பிட்டு விட்டு வரவேண்டாமா?" என்று கேட்டாள் ராதா.

"சரி, போவோம்வாருங்கள்" என்று சொல்லி மலர்க்கொடி அவர்களை வெளியில் கூட்டிவந்தாள். மறுபடியும் காரில் அவர்கள் ஏறிக் கொண்டதும் அது கிளம்பியது.

கார் எந்தெந்தப் பாதையிலோ சுற்றி நெடுநேரம் ஓடிக் கொண்டிருந்தது. அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு மிருகக் காட்சி சாலைக்கு வரக் கால் மணி நேரம் கூடப்பிடிக்கவில்லை. ஆனால், இப்போது கார் அரைமணி நேரத்திற்கு மேல் ஓடியும் வீடு அருகில் இருப்பதாகத் தோன்றவில்லை. "மலர்க்கொடி எங்கே காரையோட்டுகிறாய்? என்று பின்னாலிருந்து கேட்டார்கள். "சாப்பாட்டுக்குத்தான் போகிறோம்!" என்று முன் புறம் இருந்தபடியே பதிலளித்தாள் மலர்க்கொடி

மலர்க்கொடி, பாதை தவறிவிட்டாள் என்று தான் அந்தப் பெண்கள் இருவரும் எண்ணினார்கள். அதற்குத் தகுந்தாற்போல், காரும் பட்டணத்துச் சந்தடிகள் இல்லாத அமைதியான ஒரு பாட்டை வழியாகச் சென்று கொண்டிருந்தது.

கடைசியில் கடற்கரையை அடுத்த ஒரு சோலை வனத்தின் மத்தியிலே ஒரு மரத்தடியில் காரை நிறுத்தினாள் மலர்க்கொடி.

தங்கமும் ராதாவும் திகைப்படைந்து போய் இருந்தார்கள். ஆனால், அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல், தங்கம் மலர்க்கொடியை நோக்கி, "காரை இங்கே நிறுத்தி விட்டாயே! சாப்பிடப் போகவேண்டாமா?" என்று கேட்டாள்.

"சாப்பாடு! சாப்பாடு! சாப்பாடு எதற்கு வேண்டியிருக்கிறது! ஒருநாள் சாப்பிடாமல் இருந்தால் என்ன?' என்று கேட்டுக் கொண்டே கீழே இறங்கினாள் மலர்க்கொடி.

அவள் போக்கின் பொருள் புரிபடாமல் தங்கமும் ராதாவும் கீழே இறங்கினார்கள்.

"ஆகா! இந்த வெயிலுக்கு இந்த இடம் எவ்வளவு குளுமையாக இருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டே, மலர்க்கொடி அவர்கள் இருவரையும் நோக்கினாள். அவளைப் பார்த்தால் வழி தவறிவிட்டோமே என்றோ, சாப்பாட்டிற்கு வீட்டிற்குப் போக வேண்டுமே யென்றோ வருத்தப்படுபவளாகத் தோன்றவில்லை. அவள் தங்களிடம் ஏதோ விளையாடுகிறாள் என்று தங்கம் புரிந்துகொண்டாள். ஆனால், ராதா அதைப் புரிந்துகொள்ளவில்லை.

"சிறிது நேரம் அதோ அந்த மரத்தடியில் போய் உட்கார்ந்திருங்கள். நான் இந்தக் காரைப் பழுது பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சிரிக்காமல் சொன்னாள் மலர்க்கொடி.

இரண்டு பெண்களும் அவள் குறிப்பிட்ட ஓர் ஆலமரத்தடியை நோக்கிச் சென்றார்கள். களைப்பாக இருந்ததால், அதன் அடியில் அமர்ந்து தூரத்திலே கொந்தளித்துக்கொண்டிருக்கும் கடலையும், மேலே கீச்சிட்டுக்கொண்டிருக்கும் குருவி முதலிய பறவைகளையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

நெடு நேரம் அவர்களால் பொழுதைப் போக்கிக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியவில்லை. சுமார் பத்து நிமிடங்களுக்குப் பிறகு, அவர்கள் வயிற்றுப் பசி தாங்காமல் தங்கள் கவனத்தைத் திருப்ப வேண்டி வந்தது. அவர்கள் மலர்க்கொடி காரை நிறுத்திய பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். அப்போது மலர்க்கொடி அவர்களை நோக்கி வந்தாள்.

சிரித்துக்கொண்டே, "சாப்பிடப் போவோமா?" என்று கேட்டாள். தங்கமும் ராதாவும் எழுந்திருந்தார்கள்.

சிறிது தூரம் வந்ததும் அவர்கள் அப்படியே நின்று வியப்பில் ஆழ்ந்து விட்டார்கள். அங்கே மரத்தடியில் ஒரு பாய் விரித்து, அதன் மேல் மூன்று இலைகள் போடப்பட்டிருந்தன. எதிரில் சின்னதும் பெரியதுமான சட்டிகளில் சோறும் கறிகளும் இருந்தன.

"மலர்க்கொடி இதெல்லாம் என்ன?" என்று வியப்புடன் கேட்டாள் தங்கம்.

"சாப்பாடு!" என்றாள் மலர்க்கொடி. அந்தப் பதில் தங்கத்தின் சந்தேகங்களைத் தீர்க்கக்கூடியதாக இல்லை என்பதைத் தெரிந்துகொண்ட மலர்க்கொடி 'தங்கம் நான் புறப்படும்போதே அம்மா சோறு கட்டிக் கொடுத்துவிட்டார்கள். இப்போது நாம் சாப்பிட்டுவிட்டுச் சிறிது நேரம் இளைப்பாறுவோம். இங்கிருந்து மியூசியத்திற்குப் போய்ப் பார்த்துவிட்டு மாலையில் மெரினாவுக்குப் போகலாம்" என்றாள் மலர்க்கொடி.

பிறகு மலர்க்கொடியின் குறும்பைப் பற்றிப் பேசிக்கொண்டே அந்தப் பெண்கள் மூவரும் உணவுண்டார்கள்.

இளைப்பாறி முடிந்து அவர்கள் புறப்பட்டுச் சென்றபோது, வழியில் ஒரு பயங்கரமான கார் விபத்து ஏற்பட்டது.

—தொடரும்—

அரசியல் அரங்கம்

"வம்பன்" பதிலளிக்கிறார்

[அரசியல் அரங்கத்தில் அரசியல் குறித்த கேள்விகளுக்கு மட்டுமே பதிலளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தங்கள் அஞ்சலட்டைகளை அனுப்ப வேண்டுகிறோம். உயர்திரு **வம்பன்**, அரசியல் அரங்கம், தென்றல், சென்னை-6.]

இந்தி வெறி கொண்டலையும் ஏதோ 'ஒன்று' மறுமுறையும் தமிழ் நாட்டுக்கு வந்து இந்தியில் பேசப் போவதாகவும், அறிஞர் அண்ணாவைச் சந்தித்துப் பேசப் போவதாகவும் செய்தி வந்ததே! அதுபற்றித் தங்கள் எண்ணம் என்ன?

—பதியூர் இளவிழியன். கணபதி, கோவை.

"அதனுடைய வரவுக்கும் கோவை, ஆரோக்கியசாமியின் செலவுக்கும் சரிக்கட்ட முடியுமா?" என்று தூய குருதியுள்ள தமிழ்மக்கள் - திராவிடர்கள் கணக்குப் பார்க்கலாம்!

★

(அ) வம்பன் அவர்களே, ஐ. நா. வில் 'ஆயுதங்களைக் குறைக்க வேண்டும்' என்று, பேசியிருக்கிறாரே குருச்சேவ்! இது நடக்கக் கூடியதா?

(ஆ) 1962-தேர்தலில் இந்தப் பதினைந்தைப் பார்க்க முடியாது என்று கல்கண்டு ஆசிரியர் தலையங்கம் எழுதி இருக்கிறாரே! என்ன காரணம்-ஆருடமோ?

—தே.வ.சின்னத்தம்பி தொளார்.

(அ) ஏன் நடக்காது? போர் மூண்டால் ஆயுதங்கள் குறையத்தானே செய்யும்!

(ஆ) பிரோஸ்காந்தி மறைவுக்குப் பிறகு "நாளை நடப்பதை யார் அறிவார்" என்ற தத்துவம் பலருக்குத் தோன்றியிருக்கிறது! தமிழ்வாணன் உடல்நிலை நமக்கெப்படித் தெரியும்! 1962 க்கு முந்தியே "போய்ச் சேர்ந்து விடுவோம்" என்று அவர் கருதி இருக்கலாமல்லவா!

★

(அ) ஐயா வம்பரே! இந்தி கட்டாய பாடமாக 8-ம் வகுப்பு முதல் வந்தாகிவிட்டதே! இனியும் பொறுத்துக் கொண்டே இருப்பதா? முளையிலே கிள்ள வேண்டாமா?

(ஆ) குருச்சேவ், ஐசனோவர், நேரு இவர்களில் யாருடைய செயலை உலகம் எதிர்பார்க்கிறது?

— தளி. க. பொன்னுசாமி' உடுமலை.

(அ) முளையிலே என்ன! படர்ந்து பருமரம் ஆனாலும், வெம்போர் நெருப்பில் வீழ்த்திப் பொசுக்குவோம்! அந்த நாள் அதிக தூரமில்லை! வந்து கொண்டே இருக்கிறது?

(ஆ) செயலை என்ன எதிர்பாக்க வேண்டி இருக்கிறது? அவர்கள்தான் செயலாற்றுகிறார்களே! உலக நாடக அரங்கத்தில் இரண்டுபேர் கதாநாயகர்கள்-அவர்கள்தான் குருசேவ் ஐசனோவர்! இடையில 'விரசம்' ஏற்படாமல் இருக்க ஒரு கோமாளி - அவர்தான் நேரு! உலகமக்கள் அவரவர் அறிவுக்கும் சுவை விருப்புக்கும் ஏற்றபடி சுவைக்கிறார்கள்!

★

திராவிட நாட்டு விடுதலையை முன் வைத்து அண்ணாவும், சென்னையைத் தமிழ்நாடு என்று மாற்ற முடியாததை முன் வைத்துக் காமராசரும் தேர்தலில் நின்றால் முடிவு எப்படி இருக்கும்?

—மு. இரா. மாறன், சித்தலிங்க மடம்.

60% படித்தவர்கள் இருந்தால் காமராசருக்கு முன் மொழியவே ஆள் கிடைக்காது. இப்போது நடப்பது தேர்தலா? ஓட்டு வாங்குவதுதான்! ஓட்டு வாங்குவது வேறு! தேர்தல் வேறு!

★

தாளமுத்து-நடராசன் இருவரா ஒருவரா? அவர்கள் ஊர்?

—கி. சி. இரத்தினசாமி, கொரடாச்சேரி.

இருவர் சாவூர்.

நேரு, பெரியார், அண்ணா, மூவருக்கும் அடுத்த வாரிசுகள் யார் யார்?

—கன க. சுப்பிரமணியம், சென்னை-1.

முறையே, இந்திரா, மணியம்மை, தி மு. க.

★

கேரளத்தில் கம்யூனிஸ்டு ஆட்சியை ஒழிப்பதற்குக் காங்கிரசார் சொன்ன காரணங்கள் என்ன? அவை இப்போது உண்டா இல்லையா?

—பா. சேதுராமன், நமனசமுத்ரம்

பட்டினி மாற்றுன் பணமில்லை! பார்ட்டி வளர்க்கான் பணம் உண்டு! சுட்டுக்கரிக்கான் தோக்குண்டு! குட்டிக்காட்டில் ஒளிக்காதே! ராஜிவை நம்பூதிரி! இது அந்த நாளில் காங்கிரசார் காலித்தனம் புரிந்தபோது கழறிய மலையாளச் சுலோகங்கள். இவை, அத்தனையும் பெருகி இருக்கின்றன. குறையவில்லை தோழரே!

★

குடியாட்சித் தத்துவத்தை முதன் முதலில் கண்டுபிடித்துச் சொன்னவர் யார்?

—திருமலை. திண்டுக்கல்

ருசோ: அதனால்தான் அவன் 'குடியரசுத் தந்தை' என்று போற்றப் படுகிறான்!

★

தமிழ்வாணன் என்பவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

—அ. கண்ணப்பன் தேவக் கோட்டை.

தங்கட்சியைச் சேர்ந்தவர்!

★

வம்பரே! பாரதியின் படத்தைத் தபால் தலையில் வெளியிட்டவர்கள் தாழ்நாடு என்று பெயர் சூட்டத் தயங்குவது ஏன்? "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்ற பாரதியார் பாடல் இவர்களுக்குத் தெரியாதா?

—தி. சிலம்பன். கோவிற்பட்டி

நண்பரே! "வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்! வாழிய பாரத மணித் திருநாடு" என்ற பாரதி பாட்டு உமக்குத் தெரியுமா? பாரதி ஒரு குழப்பக் களஞ்சியம்! அவரைக் கொண்டாடுவோர் 'அரசியல் அவியல்கள்!' எப்படித் 'தமிழ்நாடு' தோன்றும்?

★

அல்சீரியா விடுதலைக்கு வக்காலாத்துப் போட்டு பேசுகிறாரே ஐ. நா. வில் நேரு! திராவிடத்தை அடக்கி ஆளும் இவருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

—மு. முத்தழகு. துறையூர்

சர்வதேச சமாதானத் தூதர்! அனைத்துலக அன்பூற்று! நடுநிலை நிற்கும் நல்லார்! நட்பு வழங்கும் வள்ளல்! என்கிற பெரிய கம்பளிப் போர்வைக்குள் இருப்பதல்லவா நீர் சொல்லும் யோக்கியக்குறைவு! திராவிடத்துப் 'பிசோ' ஒருவன் தோன்றி வாஷிங்டனிலோ மாஸ்கோவிலோ கடைவிரிக்கும்வரை கம்பளியைக் கழற்ற முடியாதே!

★

தி. மு. கவுடன் சுதந்திராக் கட்சி கூட்டுச் சேர்ந்தால் இருவருக்கும் ஆபத்து! இந்தக் கூட்டு பெரிய அநீதி! காந்தி இருந்தால் ஆச்சாரியாரின் செயலுக்கு வருத்தப் படுவார் என்கிறார் அளகேசன்! நீர்...?

—பி. ஒப்பிலியப்பன்-அப்பை.

கூட்டு, அநீதி ஆபத்தானாலும் அழிந்து போகும்போது ஆயாசம் ஏன்? என்று அளகேசனைக் கேளுங்கள்! தேர்தல் காய்ச்சல் 106 டிகிரி! எனவே அளகேசன் பிதற்றுகிறார். காந்தி இருந்தால் காங்கிரசைக் கலைத்திருப்பார் அல்லது ஆச்சாரியுடன் சேர்ந்திருப்பார் என்று அந்த 'சன்னி' நோயாளிக்குச் சொல்லுங்கள்.

★

ஐயா, வம்பரே! "தேசியம் என்பது பல தேசங்கள் ஒன்று கலந்த ஐக்கியம் என்பதாகும்" என்று 25-9 60-தின இதழில் செங்கோலர் எழுதியிருக்கிறாரே! சரியா?

—ஆ சீதாபதி. சென்னை 4.

...இதழில் செங்கோலரா? எந்த இதழ்? செங்கோலர்! - இயற்பெயரா? புனைபெயரா? ஒருக்கால் செங்கோல் - அதன் ஆசிரியர் இரண்டையும் சேர்த்துக் குழம்பு வைத்து விட்டீரோ! யாராயிருந்தால் என்ன! புரட்டன், மடையன், பைத்தியக்காரன் ஆகியவனெல்லாம் பத்திரிகை நடத்துகிறான்—எழுதுகிறான்! அந்தக் கழிவு தாட்கள் கிடக்கும் பக்கம் நான் ஏன் போகப் போகிறேன்! பத்திரிகையில் வந்தது என்று நீர் சொல்வதை நம்பிக் கூறுகிறேன். தேசியம் என்பது தேசங்களின் ஐக்கியம் என்பவன். மனதறிந்து சொன்னால் துணிச்சல்மிக்க புரட்டன் ஆவான். அறியாமல் உளறினால் மானமற்ற மடையன் ஆவான். பைத்தியக்காரனாக இருந்தால் ஆரம்பத்திலேயே கீழ்ப்பாக்கத்திற்குக் கொண்டு போவது நல்லது! எது சரி என்று நீரே முடிவு செய்யலாம். அந்த இதழ் இருந்தால் அனுப்புக.

★

ஓய் வம்பரே! தமிழ்நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டத் தமிழரசுக் கழகம் போராட்டம் நடத்த இருப்பதாகவும் அதைக் கண்ட மக்கள், குன்றத்தை மீட்டவர்கள்-குமரியைத் தந்தவர்கள் சென்னையை நிலை நிறுத்தியவர்கள் என்று ஆதரவுதருவதாகவும் - அணி திரள்வதாகவும், அதனைப் பொறாத தி. மு. க. வினர் கேலி செய்வதாகவும், "இந்திப்போர்" என்று சந்தி சிரித்து சவமாகி விட்டவர்கள், நம்மைக் கேலி செய்வதா? என்றெல்லாம் 9-10-60 ம் நாள் செங்கோலில் காணப்படுகின்றனவே! நீர் என்ன சொல்கிறீர்?

—G. மாதவன். செங்கற்பட்டு

நண்பரே, குழந்தைகள் மணல் வீடு கட்டி விளையாடுவதைக் கொத்தர்கள் கண்டு குறுஞ் சிரிப்புக் கொண்டால் அது குழந்தைகள் மேல் பொறுமை கொண்டு கேலி செய்வதாக ஆகுமா? இரயில் வண்டியில் ஏறியிருக்கும் குழந்தைகள் 'விசில்' ஊதிய உடனே வண்டியின்மேல் இருந்துகொண்டே சாளரச் சட்டங்களைப் பிடித்து தள்ளி விட்டுவிட்டு 'வண்டி தன்னால்தான் நகர்ந்தது' என்று பெருமையடித்து மகிழ்வதில்லையா! அதைப் பார்த்துக் கொண்டிருந்த பெரியவர்கள் புன்சிரிப்புக் கொள்வது குழந்தைகள் மேல் பொறுமையினலா?

த- க. குழந்தைகளும் விளையாடுகிறார்கள்! தி. மு. க புன்சிரிப்புக் கொண்டால் தவறென்ன? தமிழ்நாடு என்று பெயர் சூட்டுமாறு தமிழன் அத்தனை பேரும் சொல்கிறான். எதிர்ப்பற்ற ஒன்று. இதில் த. க வின் வீர சூரத்தனம் என்ன இருக்கிறது?

குன்றத்தை மீட்டவர்கள்? எந்தக் குன்றம் திருப்பரங்குன்றமா? திருக்கழுக்குன்றமா? வேங்கடம் என்றால், அது இன்னும் வடுகர்கள் கையிலிருக்கிறது! அதற்குள் த. க. வெற்றி விழா எடுத்துவிட்டது! இவற்றில் எந்த அக்கப்போராவது த க. தனித்து நின்று நடத்தியதா?

இந்திப் போரில் சந்தி சிரித்து சவமானவர்கள் என்று ம. பொ. சியை கிண்டல் செய்கிறார் எழுத்தாளர்!

இந்தியை எதிர்த்து இரும்புக் கதவுக்குப் பின்னால், எலும்புக் கூடு ஒன்று முதலில் சென்றது என்றால் அது இந்த ம. பொ. சிதான்" என்று அவர், எலும்புக் கூடுபோல் இருந்த அந்தக் காலத்தில் சொன்னார்! செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில் இருக்கும் ஒவ்வொரு செங்கலுக்கும் தெரியும் இந்தச் சேதி!

அப்படிச் சொன்ன அவர் போராட்ட நடுவில் 'டன்கர்க்' செய்தது நாடறியும்! பொருட்படுத்துமளவுக்கு அவர் வளராததால், இந்த சந்தி சிரிக்கச் சவமான செய்தியை எவரும் சொல்லிக் கொண்டிருப்பதில்லை?

அந்த எழுத்தாளருக்கு ம. பொ. சியின் மானத்தை வாங்க அவருடைய பத்திரிகையிலேயே இடங் கிடைத்திருப்பது அதிசயமே!

★

கரும்பு மொழி பேசும் வம்பரே! எங்களூரில் தி. க. (கிளை) துவக்க விழா நடைபெற்றது. அதில் பேச வந்தவர்களிடம் நமது கழகத் தோழர் ஒருவர் சில கேள்விகளை எழுதிக் கொடுத்தார். பிறகு, பேச்சாளர் பேசும்போது. நமது தோழரை அழைத்து "அட அறிவுக் கெட்ட பயல்களே, உங்களுக்கு ஏண்டா இந்த...?" என்று பேச எழுதத்தகாத வார்த்தைகளைக் கூறினார். இது நாகரீகமா?

...இராம. பரிமணம். அழகிய மணவாளன்.

தோழரே. அந்தப் பேச்சாளரிடம் என்ன தெரிந்துகொள்ளப் போனார் அவர்? "படித்தவர்கள் ஒருவரும் எனது கட்சிக்குத் தேவையில்லை" என்று பெரியார் சொல்லிவிட்ட பிறகு தானே, அண்ணாவின் தலைமையில் நாங்கள் எல்லாரும் வெளியேறினோம்! கேள்வி கேட்டவர் 'ரிக்ரூட்' தி. மு. க.வோ?

★

வருகிற பொது தேர்தலில் தி.மு க. வுடன் கூட்டுச் சேருவேன் என்று சுதந்திரக் கட்சியின் தலைவர் கூறியுள்ளாரே?

—பொறை. எழிலன். பிறநகர் திருச்சி

தன்னுடன் பிறவாத் தம்பி
தனைப் பெருந் தாயார்தந்தை
மன்னிய ஏட்டின் கல்வி
மறுமனையாட்டி வாழ்க்கை
இடுக்கணுக் குதவாது!
(தன்கையே தனக்கு உதவி)

— விவேக சிந்தாமணி.

மின்னுவதெல்லாம்

கா. வேழவேந்தன்.

நெற்றியில் வியர்வை தேங்க நெஞ்சத்தில் சோர்வு தேங்க சற்றேனும் மகிழ்ச்சியின்றித் தள்ளாடி நடந்தேன்!

மேற்குப் புற்றிலே கதிரோன் சென்று புகுந்தனன்.

இருளின் ஆட்சி பற்றிற்று உலகை! நோக்கும் பார்வையும் மங்கக் கண்டேன்!

அடையாற்றுக் கடற் கரைக்கு அலுங்காமல் நடந்தேன்.

பிய்ந்த வடைபோன்று நிலவோன் விண்ணில் வாட்டமாய் நகர்ந்தான்!

வானக் கடைக்காரி விரித்த கவரக் கற்குப்பை விற்கவில்லை! முடை அங்கும் உண்டு போலும்; முடிவாய் அமர்ந்திருந்தேன்!

'பூ'வென்று கூவி பித்தன் பொடியரை விரட்டுதல்போல் 'ஓ'வென்று ஆர்த்தெழுந்து ஊர்ந்திடும் நண்டையெல்லாம் பூவெண்மை அலைகள் ஓடிப் பூதம்போல் விரட்டக் கண்டேன்!

காவலோ இவைகள் ஆணிக் கடல் முத்துக்கென்று கேட்டேன்!

மரமொன்று ஆழ நீரில் மடாரென்று விழுந்தாற் போன்று அருகிலே ஓசை கேட்டேன்;

ஆமடா!

யாரோ அங்கே விரைந்திட்டார் கடலினுள்ளே.

வேகமாய்ச் சென்றேன்; பாய்ந்து கரை சேர்த்தேன்.

ஐயோ! ஓர் பெண் கண்மூடி மயங்கி நின்றாள்!

இருபத்து ஐந்திருக்கும்; எடுப்பான உடலின் கட்டு! கருநிறச் சிலை தோயக் கற்சிலை போன்றிருந்தாள்!

உருவத்தைத் தொட்டேன்;

இன்னும் உயிர்மூச்சு நிற்கவில்லை!

புருவத்தை நெளித்தாள்; மெல்லப் புரண்டனள்; விழித்தெழுந்தாள்!

"ஏனம்மா? உயிர் முடிக்க எப்படித் துணிந்தாய்? இங்கே நானுனைக் காணுவிட்டால் நமனை நீ கண்டிருப்பாய்! பூனையும் புழுவு மிந்தப் புவிதனில் வாழுமென்றால், ஏனம்மா உனக்கு மட்டும் இடந்தானு இல்லை?" என்றேன்!

"பேசாதீர் ஐயா! இங்கே பெண்ணாக ஏன் பிறந்தேன்? கூசாமல் நானும் சாகக் குறுக்கே நிற்காதீர்! செல்லாக் காசாகிவிட்டேன்! ஆண்கள் கடைச் சந்தை எனக்கு இல்லை! நீசாக வேண்டாம் என்று நீர் சொன்னால் நிற்கமாட்டேன்!"

"என்னதான் உனக்கு நேர்ந்த இடையூறு? சொல்வாய்" என்றேன்!

சின்னதோர் வாய் திறந்து செப்பினாள்;

"பிறந்தபோதே அன்னையை இழந்தேன்; பின்னர் அப்பனை இழந்தேன்; தாலி பின்னிய கணவன்கூடபேடியைப் போல் மறைந்தான்! தாலியைக் கட்டிவிட்ட தருக்கனும் மறைந்தான் என்றால் வேலியார் ஐயா?" என்றாள்; விழியாலே எதையோ சொன்னாள்!

கூலிக்கு இரும்படிக்கும் குப்பன் நான் அம்மா. இந்தா நாலணுக் காசு என்று நங்கையின் கையில் வைத்தேன்!

"இதுதானு?" என்றாள்;

"ஆமாம் இருந்தது இதுதான்" என்றேன்!

மது வேண்டும் வண்டுக் கென்றால் மகிழம்பூ எங்கே போகும்? உதவிகள் கோடிசெய்ய உண்டம்மா எண்ணம். ஆனால் நிதியில்லை; கதியுமில்லை நீ சென்று வருவாய் என்றேன்!

நடந்தவள் போன பின்னர் நடத்திட்டேன் வீடு நோக்கி!

படர்ந்தது துயரம் நெஞ்சில் பாவையின் விதிநினைத்தேன்!

அடடா! இவ் வெட்கக் கேடு அகல்வது எந்நாள் என்றே உடைபட்ட உள்ளத்தோடு உறைவிடம் சென்றடைந்தேன்!

பதினைந்து நாட்கள் ஓடிப் பறந்தன.

அன்று மாலை அதிக வேலை முடித்ததாலே அயர்வுடன் நடந்தேன்!

விண்ணில் பதிலுக்கு நிலவைப் போக்கி பகலவன் மறைந்தான்.

நல்ல விதித்தொழிற் சட்டம் அங்கும் விளங்குதல் நினைத்துக் கொண்டே அடையாற்றுக் கடற்கரைக்கு அமைதியாய் நடந்தேன்;

காதைப் புடைத்தது அலையின் ஓசை. போய்தனி இடத்தமர்ந்தேன்! விடைபெற்ற நெஞ்சம் எங்கோ வெளியிலே பறந்த நேரம தடைபோட்ட இருவர் பேச்சை சற்றுநான் கூர்ந்து கேட்டேன்!

அங்குநான் கண்ட காட்சி அனல் நெஞ்சில் எழுப்பக் கண்டேன்! நங்கைதான் அந்நாள் கண்ட நலமற்றோள், ஒருவன் கையில் தங்கியே கிடந்தாள்; சொன்ன சரித்திரம் தனையே சொன்னாள்!

பொங்கிடும் ஆத்திரத்தால் 'பூதமா, பெண்ணா?' என்றேன்!

ஓ. ஹென்றி!

4-ம் பக்கத் தொடர்ச்சி

இரும்புக்காப்பிலே பட்டது அவனது கண்ணீருக்காக கருணை காட்ட முடியாதவர்களாக இருதயமிருந்தவர்களிருந்தும், இதயமில்லாத இரும்புக் காப்பு எப்படி அன்பு காட்டும? விலங்கிடப்பட்ட ஹென்றி இழுத்துச் செல்லப்பட்டு, நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டான். கோர்ட்டார் மூன்றுண்டுகால தண்டனை தந்தனர்.

தண்டனையை நிறைவேற்ற சிறைக் கோட்டம் புகுந்தான் ஹென்றி. சிறை, அவனது சிந்தனையை வளர்க்கும் அறச்சாலையாகியது. சிறையிலே அவன் தள்ளப்பட்டதன் மூலமாக நிறைய ஓய்விருந்தது. பேனு பிடித்த கரமும், சிந்தித்த இதயமும் அமைதியடைந்துவிடவில்லை. சிட்னிபோர்ட்டரென்ற சனது பெயரை ஹென்றி அங்குதான் மாற்றி அமைத்தான். 'சிட்னி போர்ட்டர் உருப்படாதவன்-வாழத் தெரியாதவன்-அதனுல்தான் இப்போது சிறையிலே வாடுகிறான். ஓ-ஹென்றி வாழத் தெரிந்தவன். இனிமேலும் இங்கே வரமாட்டான். உலகம் அவனை எப்படிப் புகழப் போகிறது பார்......என்ற முடிவோடு புதிய நவீனங்களை எழுதத் துவக்கினுன். சிறையிலிருந்தபடியே அவனது எழுத்தோவியங்களை விலை கொடுத்து வாங்கினார்கள், பிரசுரகர்த்தர்கள் தனது புத்தகங்களுக்காக வந்த பணத்தை பத்திரப்படுத்தி, சிறைக்கு வெளியிலிருந்து படித்துக் கொண்டிருந்த தனது மகளுக்கு முதன் முதலாக கைக்கடியாரம் ஒன்று வாங்கி அனுப்பினுன். ஹென்றியின் எழுத்துப் பணி தொடர்ந்தது. பணமும் குவிந்தது. வெளியுலகிலே ஆதரவற்றிருந்த அவனது மகளுக்கு அத்தனை பணத்தையும் அனுப்பி வைத்து.கடிதமும் எழுதினுன்.

'இந்த உலகத்திலே பணமில்லாதவர்களை யாருமே மதிப்பதில்லை, உன்னோடு பணமில்லாதபோது நெருங்கி வர மறுத்தவர்களெல்லாம், பணத்தைக் கண்டதும் பாய்ந்தோடி வருவார்கள், உறவு பேச பணத்துக்கு எத்துணை மதிப்பு பார்த்தாயா? இதோ உன்னை நாடியும் பணம் வருகிறது, பயன்படுத்திக்கொண்டு உயர்வடைந்துகொள்' என்ற கருத்தோடு கடிதம் தீட்டி மகளுக்கு அனுப்பி வைத்தான்.

மூன்று ஆண்டு சிறைத் தண்டனை முடிவடைந்ததும்...1902-ம் ஆண்டு நியூயார்க் புறப்பட்டான் ஹென்றி. பழைய நண்பர்களிலே பலர் அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை. இன்னும் சிலரோ தெரிந்தும் தெரியாததுபோல நடித்தனர். ஹென்றிதான் இப்போது வாழத் தெரிந்தவனுயிற்றே! அலட்சியப் படுத்தியவர்களைப் பார்த்துச் சிரித்தான். அந்தச் சிரிப்போடு சிரிப்பாக பேனவைத் திறந்தான், உண்மையின் கணகளும் திறந்துகொண்டன. பூங்காவைப் பார்த்தான். அதைத் தத்துவத்தோடு விளக்கி எழுதியது அவனது பேனு! மாளிகையைப் பார்த்தான்; தூரத்திலேயிருக்கும் குடிசையையும் பார்த்தான்; விதவையோடு விவாதித்தான்; விபசாரியோடு பேசிப் பார்த்தான்; சர்வ வல்லமை பெற்றோம் என்று கூறிய 'சாமி'களிடமும் பேசினுன்; சாதாரண 'ஆசாமி'களிடமும் பேசினுன். அதன் முடிவு, அவனது புதுமைக் கதையிலே பாத்திரங்களாக அமைந்தனர். ஹென்றியின் நவீனமொன்று வெளி வருகிறதென்றால், அதை வாங்கிப் படிக்கும் விருப்பத்தோடிருந்தனர் மக்கள். 'ஏதோ புத்தகம் வந்திருக்கிறது புதியதாக, நாமும் வாங்கிவிட்டோம். படித்துத் தொலைப்போம்' என்ற நோக்கத்தில் ஹென்றியின் புத்தகங்கள் விலை போகவில்லை. படித்து அனுபவித்துப் பலரையும் படிக்கத் தூண்டினர்கள், வாசகர்கள். சிறந்த புத்தகம், தலை சிறந்த எழுத்தாளர் என்று விமர்சகர்கள் எழுதினர்கள் அவன் வாழ்ந்த காலத்திலேயே புகழ்பெற்று விளங்கிய நியூயார்க் பத்திரிகை 'கிரிடிக்' (Critic) "Less than a year ago the Readers of Popular Magazines began to be Startled and delighted by certain fantastic and ingenious tales, Mainly dealing with western Life and Bearing the strange device 'O Henry' as a Signature. In a Short time People began to ask who the author was. It was then that a new problem fell upon this over puzzled age Who is O Henry?...

"O Henry's real name is Mr. Sidney Porter, A Gentle man from Texas, who having seen a great deal of the world with the naked eye, happened to find himself in Newyork about two years ago and there discovered a market where people would buy Stories of his Experiences."

என்று இதுபோல எழுதியது.

ஹென்றியின் கதைகளெல்லாம் வியபபுத் தரும் முறையிலே கொண்டு செல்லப்பட்டு யாரும் எதிர்பாராத முறையிலே முடிககப்பட்டன. கதை முற்றுப்பெறும வரை அதன் முடிவை யாரும் நிர்ணயிக்க முடியாது. "The gift of the magi" என்ற அவனது புத்தகம் எல்லாவற்றிலும தலை சிறந்து விளங்கியது. அவனது புத்தகங்கள் பல மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டன. 1904-ம் ஆண்டு 65 சிறு கதைகள் எழுதி முடித்தான். 1905-ம் ஆண்டில 50 நெடுங் கதைகளை எழுதினுன். மாப்பசானின் பரம்பரை எனறு ஹென்றியை வாசகர்களில் பலர் பாராட்டினர். "இங்கிலாந்துக்கு டிக்கென்ஸ் கிடைததது போல; பிரான்சுக்கு விக்டர் ஹியூகோ கிடைத்ததுபோல, அமெரிககாவுக்கு ஓ ஹென்றி கிடைத்திருக்கிறர்" என்று எழுத்தாளரொருவர் எழுதிப் பெருமையடைந்தார். ஹென்றியின் கதையொன்றை பிரெஞ்சுப் படத் தயாரிப்பாளர்கள், சமீபத்தில் படமாக்கத் துவக்கினர்கள். ஹென்றி எழுதி முடித்திருந்த மொத்தச சிறு கதைகளின எண்ணிக்கை 252. எழுத்திலே புதுமை கண்ட அந்தப் பேனுவீரன். எழிலான அவனது இலக்கியங்களை நாட்டுக்குப் பரிசாகத் தந்துவிட்டு 1910-ம் ஆண்டு ஜூன் திங்கள், ஐந்தாம் நாள் இந்த உலகை மறந்தான். ஆனுல், உலகம் ஹென்றியை மறக்கவில்லை! ★

வாலாஜாபாத் இந்துமதி பாடசாலையையும் அதில் கல்வி பயிலும் 1000 மாணவர்கள் பெற்றுவரும் சமூகப் பயிற்சிகளையும் நேரில் பார்ப்பதற்காக பிலிப்பைன் தீவிலிருந்து ஒருவாரமாக இந்தியாவிலுள்ள கல்வி நிலையங்களை யெல்லாம் பார்வையிட்டு வரும் டாக்டர் பெர்னடினே, வைகாண்டி, மடாலி, பால்ரி ஆகியோர்கள் 11-10-60 அன்று வாலாஜாபாத் வந்தார்கள்.

எரிந்த வீடு

2 ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டிக்கிடக்கு. ஒன்பதாங் கிளாசு படிச்சதே போதும் வீட்டிலே இருந்து தொலையட்டும் என்று ஆத்திரமாகப பொரிந்து தள்ளிவிட்டு மறுபடியும் வெளியே போய்விட்டான்.

இது வீட்டில் வழக்கமாக நடைபெறும் நிகழ்ச்சி, தோல்வியும், கையாலாகாத்தனமும் அழகபபனுடைய உணர்ச்சியை மரத்துப் போகச் செய்துவிட்டன. தன் குறையே அவன் கண்களுக்குத் தெரியவில்லை. அவ்வளவு துன்பத்திலும் அவனுக்கொரு மருந்து அவன் கையிலிருந்த மோதிரம். அதைப் பார்க்கும்போது அவனுடல் பூரிக்கும். கண்களில் ஒளி பிறக்கும். மனம் விம்மும்!

★

அழகப்பனுடைய மகள் லெட்சுமி பெரியவளாகிவிட்டாள் என்ற செய்தியைக் கேட்ட ராமனுதன் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிவிட்டான். தம்பிக்கு மகள் பிறந்துவிட்டாள என்ற செய்தியைக் கேட்டபோது, அவள் தவழ்கிருள், துள்ளி விளையாடுகிருள என்று கேட்டபோது, அவள் பள்ளிக்குச் செல்கிருள், படிக்கிருள் என்று அறிந்தபோது அவளை வழியில் சந்தித்துக் கொஞ்சியபோது ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட பாவாடை கட்டும் சிறுமி தாவணி போடும் குமரியாகி விட்டாள் என்று அறிந்ததும் ஆயிரம் பங்கு மகிழ்ச்சி அவன் அடைந்தான். தன் மனைவியை அழைத்தான். பாவாடை துண்டுகள் மற்றும் உயர்தரமான ஆபரணங்கள் முதலியன எடுத்துக் கொடுத்து தம்பிகள் லெட்சுமியைப் பார்த்து வர அனுப்பிஞன். அவனுல்தான் போக முடியாதே! அண்ணன் தம்பிகள் மனஸ்தாபமாக இருந்தாலும், அவர்களுடைய மனைவ்மார்கள் ஒருவருக்கொருவர் அன்பாகப் பழகி வந்தார்கள். ஆகவே ராமனுதனுடைய மனைவி லெட்சுமியைப் பார்க்கப் புறப்பட்டாள். ஆனல் போகும்போது எடுத்துக்கொண்டு போன பொருள்களுடன்வருத்ததோடு திரும்பி வந்த தனமனைவியைக்கண்டு இராமனுதன சற்று வருத்தத்தோடு என்ன நடந்தது என்று கேட்டான். உங்கள் தம்பி இதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். என்று அவளும் வருத்தத்தோடு சொல்லி சாமான்களை மேஜை மீது போட்டுவிட்டு உள்ளே போய்விட்டாள். அந்தப் பொருள்களைப் பார்த்துப் ராமனுதன் பெருமூச்சுவிட்டான். இந்த மன வேதனையிலிருந்து என்னைக் காப்பாற்று வாரில்லையா? என்று அவன் மனம் அலறியது.

அழகப்பன் லெட்சுமிக்கு சாதாரணமான ஒரு இடத்திலிருந்து ஒரு மாப்பிள்ளைப் பார்த்து சுருக்கமாகக் கல்யாணத்தைச் செய்துமுடித்தான். அழகப்பனுடைய சொந்தத் திருமணத்தைச் சாக்கிட்டு ஏராளமான பொருட்களை வாரி இறைத்து தங்கள் பைகளை நிரப்பிக்கொண்ட அவனுடைய பழைய நண்பர்கள் யாரும் இந்தக் கல்யாணத்திற்கு வரவில்லை. வராமலிருந்தாலும் பரவாயில்லை, கேலியும் செய்தார்கள்.

இராமனுதன் எண்ணற்ற பெருமூச்சுக்களாக, தன் மனத் துன்பங்களை ஆவியாக்கிக் கொண்டிருந்தான். தம்பியின் அர்த்தமற்ற பிடிவாதமும், வரட்டுக் குணமும், அவனுடைய சிந்தையைக் அரித்துக்கொண்டே இருந்தன. லட்சுமியின் கணவன் சுந்தரத்திற்கு ஒரு நல்ல வேலை பார்த்து வசதி செய்து கொடுத்தான். அவனுல் செய்ய முடிந்தது அவ்வளவுதான். வரவேண்டியதைச் சட்டப்படி கேட்டு வாங்கமுடியும். ஒரு சிலருக்கு நாம் மனம் விரும்பிக் கொடுக்க முயல்வதை சட்டப்படி பெற்றுக்கொள் என்று கண்டித்துக் கொடுக்க முடியாது. அவர்களாக மனம் விரும்பிப் பெற்றுக்கொண்டாலொழிய.

அந்த வருடம் நல்ல மழை பொழிந்தது. அழகப்பனைவிட இராமனுதனுக்குத்தான் அதிக மகிழ்ச்சி தம்பியினுடைய கஷ்டங்கள் ஓரளவு குறையும் என்று அவன் நம்பினுன். ஆனல் அவன் தன்பத்தின் உச்சத்தைச் சந்திக்கப்போகிருன் என்று யாருக்குத் தெரியும்.

திடீரென ஒருநாள் இராமனுதனின் வேலைக்காரன் ஒருவன், தூங்கிக்கொண்டிருந்த இராமனுதனைப் பதட்டத்துடன் தட்டி யெழுப்பி விஷயத்தைச் சொன்னுன். "கொத்துக் கொத்தாக விளைந்திருந்த முத்து முத்தான நெல்மணிகளை சாக்குச் சாக்காக கட்டிவைத்திருந்தஅழகப்பனுடைய வீடு தீக்கிரையாகியது.' என்று கேட்ட இராமனுதன் துடிதுடிப்புடன் அழகப்பன் வீட்டை நோக்கிக் கிளம்பினுன். அந்தக் காட்சியைக் கணவே அவனுக்குப் பொறுக்கவில்லை. பலர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

அழகப்பனுடைய மனைவி இலேசான தீக்காயங்களுடன் ஒரு ஓரத்தில் சில பெண்களின் கவனிப்பில் சோர்ந்துபோய்ப் படுத்திருந்தாள்.

அழகப்பன் எரிந்த வீடு முழுதும் எதையோ வெறித்துத் தேடிக் கொண்டிருந்தான். இராமனுதன் அவன் அருகில் சென்றுன், ஆனல் அழகப்பன் அவனைக் கவனிக்கவில்லை அவன் எதைத் தேடுகிருன் என்பதை இராமனுதன் கவனித்தான். கருகிப்போன ஒரு உத்தரக் கட்டையின் அடியில், தீய்ந்துபோய்க் கிடந்த ஒருகந்தையைப் பிடித்திழுத்தான் அழகப்பன். அது ஒரு பழைய கோட்டு. அந்தக் கோட்டில் ஒரு பைக்குள் கையை விட்டான். அந்தப் பை கரித்தூளாக உதிர்ந்துவிட்டது. அந்தப் பைக்குள்ளிருந்த ஒரு துளி தங்கத்துகளும், ஒரு கருகிய கல்லும் இராமனுதனுக்கு நிலைமையைப் புரிய வைத்தது. அதுதான் அந்தமோதிரம். 'தம்பி! அந்த மோதிரம் போனல் போகிறது. கவலையைவிடு. அதுதான் இவ்வளவுக்கும் காரணம். என்று விம்மலுடன் சொன்னுன். அழகப்பன் அதைக் கவனிக்கவே இல்லை. எங்கோ வெறித்துப் பார்த்தான். பிறகு தொப்பென்று கீழே விழுந்தான் விழுந்தவன் எழுந்திருக்கவே இல்லை.

வெண்பாப் போட்டி-9.

★

ஈற்றடி :

வஞ்சனை யாளர் வடக்கு.

இறுதி நாள் 5-11-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

தலைமை நிலைய அறிக்கை (அ) 5/60

தொழிற்சங்க நிர்வாகிகட்கு

வேண்டுகோள்

திராவிட முன்னேற்றக் [கழகத்தின் சார்பாகவும், ஆதரவிலும் இயங்கிவரும் தொழிலாளர் முன்னேற்றக் கழகங்கள், மன்றங்கள், சங்கங்கள் முதலிய பல்வேறு அமைப்புக்கள், தி. மு. க. தொழிற்சங்கச் செயலாளருடன் தொடர்புகொள்ள ஏதுவாகவும், தொழிற்சங்கப் பட்டியல் அமைக்கத் துணையாகவும் அந்தந்தத் தொழிற்சங்கத்தின் பெயர், ஊர், மாவட்டம், நிர்வாகிகள் விவரம், தேர்ந்தெடுக்கப்பட்ட காலம், தனியான சட்டதிட்டங்கள் அமைந்திருப்பின் அவற்றின் படி, ஆகிய விவரங்களை— உடனடியாக (30-10-60 க்குள்) கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பித்தரக் கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

தொழிற் சங்கச் செயலாளர்,
தி. மு க. தலைமை நிலையம்,
அறிவகம்', சென்னை-13

க. அன்பழகன்,
தொழிற் சங்கச் செயலாளர்.

அறப்பணி புரிந்த ஜெர்மன் இளம்பெண்.

ஐரிஸ் ஹில்பர்ட்

டூபிஸ்பர்க் (டாட்) - ஜெர்மன் இளம்பெண் உர்ஸூலா பெண்டர் என்பவளுக்கு அவளுடைய இந்திய நண்பன் ஒருவன் எழுதிய கடிதம் ஒன்று அவள் வாழ்க்கையிலேயே முக்கியத்துவமுள்ள ஒரு நற்பணியைச் செய்யத் தூண்டியது. ஜெர்மனியில் படிக்க வந்தபோது பழக்கமான அந்த நண்பன் ஒரிஸாவில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமையைப் பற்றியும் அதனால் மக்கள் பட்ட சொல்லொண்ணா இன்னல்களைப் பற்றியும் விவரமாக அவளுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். வெள்ளக் கொடுமையினால் மட்டுமின்றி அதன் பின்பும் ஏற்பட்ட பஞ்சநிலை காரணமாக பலர் உயிரிழக்கவும் நேரிட்டதையும் அவன் விவரித்திருந்தான். இவ்விவரங்கள் உர்ஸூலாவின் உள்ளத்தை உருக்கி விட்டன.

உர்ஸூலா டூபிஸ் - பர்க்கில் ஒரு கடையில் விற்பனையைக் கவனிக்கும் பணிப்பெண்ணாக வேலை பார்த்து வருகிறாள். நாள் முழுவதும் கடையில் வேலை பார்த்த பின்பு பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் அவதிப்படும் ஒரிஸா மக்களுக்கு உதவ நிதி திரட்ட அவள் புறப்படுவாள். அவள் செய்யும் முயற்சியால் கிடைக்கும் தொகை மிகப் பெரிய அளவில் இராது என்பது அவளுக்கே தெரியும். ஆனால் தன்னால் முடிந்ததைச் செய்யவேண்டும் என்ற ஆர்வமே அவளைத் தூண்டிவிட்டது.

ஜெர்மனியில் தர்ம காரியங்களுக்காக நிதி திரட்டும் வேலைக்கு தனிப்பட்டவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுவதில்லை பொது நிலையங்கள், தர்ம நிறுவனங்கள் இவை மட்டுமே நிதி திரட்டலாம். மக்களின் ஈவிரக்க பச்சாத்தாப குணத்தைப் பயன்படுத்தி நிதி சேர்த்து தனிப்பட்டவர்கள் அதை சொந்தக் காரியங்களுக்கு பயன்படுத்திக்கொள்வதைத் தடுக்கவே, இந்த ஏற்பாடு ஜெர்மனியில் இருந்து வருகிறது. உர்ஸூலா பெண்டர் இந்த நிதி திரட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கு அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினாள். நான்கு ஜெர்மன் ராஜ்யங்கள் அவளுக்கு அனுமதியளித்தன. பிறருக்கு உதவ வேண்டும் என்ற ஆர்வத்துடன் அவள் கேட்ட கோரிக்கையை அதிகாரிகள் தட்டிக் கழிக்க முடியவில்லை.

ஒவ்வொரு தினமும் கடையில் வேலை முடிந்ததும் அவளும் அவளுடைய நண்பர்களும் வீட்டுக்கு வீடு சென்று நிதி மட்டுமின்றி உடை, மருந்துகள், மற்றும் இதரப் பொருள்களையும் சேகரிக்க ஆரம்பித்தனர். இப்படிச் சேகரிக்கப்பட்ட பொருள்கள் பார்சல்களாகக் கட்டப்பட்டு டஸ்ஸல்டிராபிலிருந்து இந்தியாவுக்கு "ஏர் இந்தியா" விமானங்கள்மூலம் அனுப்பப்பட்டன. இந்த உதவி ஒரு சிறிதே என்றாலும் மிகப் பெரும் உண்மையை உணர்த்துவதாகும். உலகிலுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் உதவவேண்டும் என்ற உண்மையே அது.

தனிப்பட்டவர்களின் அன்பு, அனுதாபம் இவைகளின் அஸ்திவாரத்தைக் கொண்டே ஒரு நாட்டின் ஐக்கிய பலம் உருவாக்கப்படுகிறது. ஜெர்மன் யுவதியின் உதவவேண்டும் என்ற மனப்பான்மையே அன்பின் வடிவமாகும். இந்த அன்பே எல்லா உலக மக்களையும் ஒன்றாகப் பிணைக்கிறது. தனிப்பட்டவர்கள் தங்களுக்குள்ள பலவீனத்தையும் பொருட்படுத்தாமல் பெரும் லட்சியங்களை சாதிக்கமுடியும் என்பதற்கு உர்ஸூலாவே ஒரு சிறந்த உதாரணம். அவளுடைய அன்பு ஜெர்மனியிலுள்ள ரூர் பகுதிக்கும் இந்தியாவில் உள்ள ஒரிஸாவிற்கும் ஒரு பாலத்தை அமைத்துவிட்டது.

(யுனிவர்சல் பிரஸ் சர்வீஸ்)

தென்றல் முல்லை இரண்டுக்கும்

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் தேவை :—

கீரனூர்	போடிநாயக்கனூர்
பரவை	துறையூர்
பாபநாசம்	பன்னிமடை
ஜெயங்கொண்டம்	வடமதுரை
பெருநாழி	முசிரி
நீடாமங்கலம்	ஆனைமலை
திருப்பெரும்புதூர்	காட்டூர்
வனவாசி	கல்லறைப்பட்டி

விவரங்கட்கு

தென்றல் : சென்னை-6

வேகமாகத் தயாராகிறது! விரைவில் வெளிவருகிறது!

கழகத்தை எதிர்ப்போருக்குக் கடுமையான மறுப்பு ஏடு

"கொள்கைப் புரட்டர்கள்"

ஆசிரியர்:-கூடலரசன்.

புகைப்படம் இணைக்கப்படுகிறது. விலை : 50 புதியகாசு

தேவைக்கு முன்பணத்துடன் பின்வரும் முகவரிக்கு எழுதுக.

3, கமாண்டிங் ஆபீசர் தெரு 2, மேலமாசி வீதி. மதுரை-1.

ஓசிப் பொடி உதவாக் கரை!

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

என்பதை எதிர்பாராமல் தன்னுடைய தரத்தைக் கெடுத்துக் கொண்டது!

இதனால், விவகார எல்லையில்—அமெரிக்கா குற்றவாளிக் கூண்டில் நிற்கிறது!

ஐசனேவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்கிறது உருசியா!

இந்தக் கேள்வி அமெரிக்காவின் மானத்தை விலை கூறுவதாகுமல்லவா? எப்படி நெஞ்சார உடன்படும்?

2-வது உலகப் போருக்குப் பிறகு உருவாகி வளர்ந்துள்ள அரசியல் வேற்றுமை—அதன், ஆழம் நீளம்—வலிமை, சுற்றுச்சார்பு இவைகளை, நேரு பண்டிதர் கடுகளவாவது சிந்தித்தாரா?

போதாக் குறைக்கு ஐ. நா. வில் செஞ்சீனாவுக்கு இடமில்லை என்று, அமெரிக்கர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தடுப்பது உருசியாவுக்குக் குளிர்ச்சியாகவா இருக்கும்?

ஐ. நா. வில் செஞ்சீனா சேர்ந்தால் உருசியாவுக்கு ஆதரவு பெருகலாம்.

இப்போதுள்ள நிலைமையில் அமெரிக்கா, ஐ. நா. வில் பெரும்பான்மையுடன் இருக்கிறது. இதில் சரிவு கண்டால்? இந்த அச்சம் அமெரிக்கருக்கு இல்லை என்று கூற முடியுமா?

இவ்வளவு வைரம் பாய்ந்த மன வேற்றுமை எளிதில் நீங்கக்கூடியதா?

பண்டித நேரு உண்மையில் இராஜ தந்திரியாக இருந்தால்—அவருடைய நன்மையையும், அதன் தொடர்பில் இந்தியத் துணைக்கண்டத்தின் நலத்தையும் சிந்திப்பவராயிருந்தால், ஐ. நா. வுக்குப் போயிருக்கக் கூடாது! அப்படியே போயிருந்தாலும் தந்திரமாகத் தப்பி இருக்க வேண்டும் சிக்கலில் சிக்காமல்!

இப்போது விளைவு என்ன? நேருவின் இராஜ தந்திர சூன்யத்தால் பிரிட்டனுடைய வெறுப்பைத் தேடியிருக்கிறார்!

பிரிட்டனும் அமெரிக்காவும் வெளிநாட்டுக் கொள்கைகளில் ஒன்று போலவே இருக்கும்! ஆகவே, பிரிட்டனின் வெறுப்பு, அமெரிக்காவின் வெறுப்புத்தான் என்று சொல்லத் தேவையில்லை!

நேரு நியூயார்க்கில் இருந்தபோதே இந்த வெறுப்பு, அவருக்கு குறிப்பாக உணர்த்தப்பட்டிருக்கிறது!

நேருவின் விருந்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் கலந்துகொள்ளாமல் தட்டிக் கழித்ததன் பொருள் என்ன? நேருவின் போக்கில் ஏற்பட்ட வெறுப்புத்தான்!

இறுதியாக பிரிட்டன் விமான நிலைய நிகழ்ச்சிகள் நேருமீது பிரிட்டனுக்குள்ள வெறுப்பை உலகறியச் செய்துவிட்டது! நடந்ததென்ன?

நியூயார்க்கிலிருந்து புறப்பட்ட நேரு அடினரைப் பார்த்துவிட்டுப் பிரிட்டனுக்கு வந்தார்.

முன்பெல்லாம் நேரு பிரிட்டனுக்கு வந்தால், மந்திரிகள், பெரிய அதிகாரிகள் புடை சூழக் காத்திருந்து, மாலை சூட்டி வரவேற்பது வழக்கம்!

இந்த வழக்கம் பிரிட்டனில் மட்டுமல்ல. அயல்நாட்டுத் தலைவர்கள் வந்தால், அவர்களை மந்திரிகள் இருந்து வரவேற்பது எல்லா நாடுகளிலும் வழக்கம்தான்!

அதுபோல் பிரிட்டனில் நேருவை பல முறை வரவேற்றிருக்கிறார்கள்.

ஆனால், இப்போது? .. மந்திரிகள் தந்திரிகள் யாரும் விமான நிலையத்திற்கு வரவில்லை நேருவை வரவேற்க! அநாதைபோல்-சாதாரணப் பயணிகளைப்போல் விடப்பட்டார் நேரு!

இந்த நிகழ்ச்சி நேருமீது பிரிட்டனுக்குள்ள வெறுப்பையும், அலட்சியத்தையும், உலகறியச் செய்துவிட்டது!

இதன் விளைவு என்ன? இனிமேல் காமன்வெல்த்தில் இந்தியாவின் நிலை என்ன?

பிரிட்டிஷ் அமெரிக்கக் கடன்கள்-மூலதனங்கள், இனி என்ன உருவம் பெறும்?

3-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக எதிர்பார்க்கும் பிரிட்டிஷ் அமெரிக்கக் கடன் உதவி என்ன கதி அடையும்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் காலப் போக்கே தெளிவுபடுத்த வேண்டும்!

இத்தகைய சாதாரண ஆள்-நேருவைத்தான் எத்தர்கள் ஏமாளிகளுக்கு 'ஆசிய சோதி' என்று அறிமுகப் படுத்துகிறார்கள்!

ஓசிப் பொடி உதவாக்கரையே! என் வீட்டு வாசற்படியில் ஏறாதே! என்று, மூலைவீட்டான் சொல்லிவிட்டான்!

இனி. மாடி வீட்டான்மட்டும் மதிப்பானா? உதவாக்கரைதான் என்றாலும் மூலைவீட்டுக்குப் போய் வந்துகொண்டிருக்கிறானே, சேதி சொல்லிவிடவாவது உதவுவான் என்றுதான், மாடிவீட்டான் உதவாக்கரையை வரப் போக விட்டுக் கொண்டிருந்தான்!

உதவாக்கரை—உதவாக்கரைதான்! ஒரு பயனுமில்லை! என்று தெரியும் போது மாடிவீட்டானும் 'வாசலில் மிதியாதே!' என்று சொல்லிவிடுவான்!

நேருவின் உருசிய உறவு, மாடி வீட்டான் உறவு முறைபோல்தான். அமெரிக்கக் கூடாரத்திற்கு அஞ்சல் அனுப்பத்தான் குருசேவ் நேருவை மதித்துக்கொண்டிருந்தார்! இனி அதுவும் போய்விடும்!

குருசேவின் உள்ளார்ந்த அன்புக்குப் பாத்திரமாக வேண்டுமென்றால், இந்தியாவில் கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்பட வேண்டும்,

அத்தைக்கு மீசை முளைப்பது எப்போது? சித்தப்பா என்று அழைப்பது எப்போது?

உருசியாவையும் அமெரிக்காவையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்றால் அந்த இரண்டு நாடுகளும் அஞ்சத்தக்க ஆட்பலம் — விஞ்ஞான வளர்ச்சி—படைப் பலம்- பொருளாதார பலம் இத்தனையும் கொண்ட நாடு தலையிட்டாக வேண்டும்.

இன்றைய உலகில் அப்படிப்பட்ட வலிமை கொண்ட நாடு ஒன்றுமில்லை—ஒற்றுமையும் வரப்போவதில்லை!

இந்த நிலையில் ஐ. நா. ஏன்? அதன் கூட்டம் ஏன்? என்றால், உருசியரும், அமெரிக்கரும் ஒருவரை யொருவர் மனப்போக்குக் கண்டறியத்தான் ஐ நா. இருந்து பயன்படுகிறது!

இதில், நேருவின் போலிப் புகழ் அம்பலமாகி "வீணுக்கு மாவிடித்து களஞ்சியச் சோளம் பாழாச்சு" என்கிற கதையும் உண்மையாகி விட்டது,

வெண்பாப் போட்டி

பட் டென்று தொடங்கிப் படார் என்று முடிக்க

பட்டுத் தளிர்மேனிப் பாவை ஒருத்திகைக்(கு)
எட்டும் கனிபோல் எதிர்நின்று--கட்டிளஞ்
சீரிதழ் பூத்துச் சிரித்துவிட்டால் யாரேதான்
பாரில் கவரப் படார்?

—அர. தமிழன்பன், விருத்தாசலம்.

பட்டென் றெதிர்த்தோடிப் பாய்புலிபோல் நம்மவர்கள்
முட்டாள் அரசியலை முழ்சடிக்க--முட்டின்றி
வந்தால் வடவரெலாம் வாடுவரே, பின்னவர்நம்
பைந்தமிழர் கண்ணிற் படார்!

—நெற்குப்பை. பனை. பழநியப்பன், மேலைச்சிவபுரி.

பட்டினப் பாலை படித்தோர்; புறமறிந்தோர்;
ஒட்டாரை வெஞ்சமரில் ஓடவைத்தோர்;--தொட்டணைக்கும்
சீர்சால் குறள்கற்ற செந்தமிழர்; இந்தியின்
பார்வைச்(கு) அடிமைப் படார்!

—பா. ஐ. முகம்மது அலி, செங்கற்பட்டு.

பட்டுப் பலதுன்பம் பாவெழுதி, உள்ளமெலாம்
தொட்டு விளையாடும் தென்றலுக்கே--கட்டனுப்பிப்
பாவொன்றும் வாராமை பார்த்தோர், அறியார்வெண்
பாவென எண்ணப் படார்.

—பி, கோ. கோவிந்தராசன், ஆமதாபாத்.

பட்ட மரம்தழையா பால்காம்பில் ஏருது
விட்டுப் பிரிந்தவுயிர் மீளாது--கெட்டழுகி
நாற்றமெழும் ஆட்சி நடத்துவோர் நாட்டிலினிப்
போற்றிப் புகழப் படார்.

—வள்ளிவேலன், நாய்க்கனூர்.

பட்டினி என்றும் பலவிதமாய்ப் பொய்புகன்றும்
வட்டிக் கடன்கேட்பார் வாங்கியபின்,--பட்டகடன்
என்றும் கொடார்காண் எதிர்ப்படினும் பாரார்பின்
என்றும்நம் கண்ணில் படார்.

—கோவை செல்லம், ராம்நகர்.

பட்டிகள்கன் னெஞ்சர் பகல்வேடப் பச்சோந்தி
மட்டிகள்தன் னுட்டை மறந்தவர்கள்--கெட்டகுணக்
காவலர்கள் காட்டிக் கொடுப்போர் கடும்பொய்யர்
பாவலரால் பாடப் படார்.

—சி. தனலன், தச்சப்பத்து.

பட்டாள் மனைவாழ்க்கை பாஞ்சாலி ஐவர்க்குக்!
கெட்டாள் அகலிகையவ் விந்திரனால்!--சுட்டுங்கால்
சீதை சிறையினில் சூலுண்டாள்! ஏனிந்தப்
பாதகியர் தூற்றப் படார்?

—சா. நடராசன், சென்னை-12.

பட்டுத் திருமேனி; பல்வரிசை முல்லை;தேன்
சிட்டுக் குரல்;தனமோ செவ்விள நீர்;--மொட்டுக்கள்
சொட்டும் இதழ்கொவ்வை; சுட்டும் விழியம்பு
பட்டார்க்கு நெஞ்சம் 'படார்!'

—சோம, திருநாவுக்கரசு, நாச்சியாபுரம்.

பட்டோ நறுமலரோ பாடிப் பறக்கின்ற
சிட்டோ சிறுகிளியோ செந்தேனோ--தொட்டிலிலே
கண்வளரும் பொன்மகவைக் கண்டுருகித் தேன்கவிதைப்
பண்தந்தோர் தாழ்வு படார்!

—ப. க. பொன்னு, பொள்ளாச்சி.

பட்டென்றாள் 'ஆ'வென்றேன், நூலென்றாள் ஏதிங்கே
துட்டென்றேன், என்று துயரொழியு மோவென்றாள்
எட்டென்றேன், ஏனென்றாள் எட்டியறைந் தேனவளின்
பட்டுக்கன் னத்தே படார்!

—அரிமழம், கரு. செல்லமுத்து, புதுக்கோட்டை.

பட்டென்றும் சிட்டென்றும் பட்டம் பலதந்து
கட்டி மகிழ்ந்திட்ட காதலர்--கட்டழகி
மற்றொருத்தி என்றாரே! மாதெனைக்கை விட்டவனைப்
பற்றினார்! இன்பப் படார்.

—செஞ்சடையான், திருக்கழுக்குன்றம்.

பட்டென்று போனாளென் பைங்கொடியாள் சாவூர்க்கே
பொட்டென்றென் சீர் வாழ்வு போயிற்றே!--கட்டிக்
கரும்பே கவிக்குயிலே கண்மணியே என்போல்
பெருந்துயர் யாரும் படார்.

நா. தமிழடியான், சென்னை-30.

பட்ட துயரெல்லாம் போதாவோ! இன்னுமேன்
கட்டி யழுகின்றீர் காங்கிரசை?--மட்டற்ற
திட்டமாம் "இன்பத் திராவிட"த்தில் மக்களென்றும்
பட்டினியா லின்னற் படார்!

—தி இர. வெங்கடேசன்.

பட்டுடுத்திப் பொட்டிட்டுப் பாகுமொழி தான்பேசித்
துட்டுக்(கு) உடல்விற்பர்; தூமொழியே!--மட்டின்றித்
தாவிவரும் ஆடவரின் தோள்தழுவும் தாசியர்நற்
பாவையருட் சேர்க்கப் படார்.

—பழநி. முத்துதாசன், சென்னை.

பட்டினி யாலிங்குப் பைந்தமிழர் வாடுகையில்
கொட்டிக் குவிப்பதேன் கோயிலிலே?--விட்டதனைக்
கல்விக் கலைக்கோயில் கட்டி முடித்தவரே
பல்வாழ்வுற் றெள்ளப் படார்.

—கோ. சோ. ஜெயபால், தெற்குப் பொய்கைநல்லூர்.

பட்டம் பதவி பணத்தாசை கொண்டவராய்ச்
சட்டமாய்ச் சட்ட சபையிலே--கொட்டாவி
விட்டுறங்கி ஏய்த்து வெளிவருவோர், மக்களால்
எட்டுணையும் எண்ணப் படார்.

— மரு. பரமகுரு, காரைக்குடி.

பட்ட மரமாகிப் பண்பற்று வாழ்வினிலே
தட்டுத் தடுமாறித் தாம்கெட்டு--மட்டிகளாய்
பாரில் மதம்வளர்த்து 'பக்தி' எனச்சொல்வோர்
யாராலும் நாடப் படார்.

—கோ. விஸ்வநாதன். தே. க. மே. நத்தம்.

பட்டுத் தளிர்மேனிப் பாவையின்மேல் காதலுற்றுப்
பட்டப் பகலெல்லாம் போகுமிடம் பார்த்துநின்று
சிட்டுப்போற் பின்தொடர்ந்து முன்தானை பற்றிநின்றேன்
பட்டதுபோல் யாரும் படார்.

—பூ. எ. தேவதாசு, மேல்மாநகர்.

பட்டாடை சுற்றிப் பருவஎழில் காட்டிக்
கட்டான நல்லுடல் காட்டுவரே--மட்டார்ந்த
வண்டார் குழலார் வலையை விலையீந்து
கொண்டார் குணத்திற் படார்.

—மதிஒளி, சென்னை.

பட்டயம் கட்டியே பாராண்ட நந்தமிழைக்
கெட்டழிக்க இந்தி கிளர்ந்ததே--கட்டிளமைக்
காளையர்காள்! போராடக் காலம் கடத்தாதீர்
நாட்கழிப்போர் நன்மைப் படார்.

—திருமலையன், அகிலாண்டபுரம்.

பட்டையடித் தால்தான் பரலோகம் உண்டென்றும்,
பொட்டிட்டே சாணியைப் பூசித்தும்--முட்டும்
சகத்தீரே! நல்வாழ்வு சந்ததமும் என்பார்
பகுத்தறிவால் ஆளப் படார்.

—புதுக்கோட்டை அன்புடைநம்பி, திருமயம்.

பட்டினியால் மாண்டாலும் பஞ்சத்தால் சாய்ந்தாலும்
வெட்டுவதால் வீழ்ந்தாலும் வெம்பியே--பட்டழிந்து
வேரழிந்து தீய்ந்தாலும் தென்னவர் வேற்றாரின்
பாரதத்திற் காக்கப் படார்.

—பெ. இராசேந்திரன், மருதங்குடி.

பட்டினியால் உள்ளம் பதைத்தாலும், பார்த்தேதகை
தொட்டவளே வெஞ்சொல்லால் சுட்டாலும்,--எட்டாக்கண்
ணீரில் திளைத்தாலும்; நேர்மழலை கேட்டிருப்போர்
பாரினில் இன்னற் படார்.

— உதயை. மு. வீரையன், உதயமார்த்தாண்டபுரம்.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.